விச்வாவஸு ஹு மாசி மீ
பிப்ரவரி - மார்ச் 2026

மலர்: 8
இதழ்: 11

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்



MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com



கனு ஆஸ்தானம்

விச்வாவஸு ௵ மாசி ௴
பிப்ரவரி - மார்ச் 2026

மலர்: 8
இதழ்: 11

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

| வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell : 95000 45604
Designed by: yeSKay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

ஸ்ரீ வைஷ்ணவ தினசரி எனும் நம் வேதாந்தவாரியனின் அத்புதமான நூலில் மூன்றாம் பாசுரத்தில் உபாதானம் எனும் காலத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் எவ்வாறு அநுஷ்டிக்க வேண்டும் என்பதை அழகாக விவரிக்கிறார்.

தாமரை மலரில் அவதரித்த பிராட்டியோடு கூடியவனும், ஸ்ரீவத்ஸமென்ற மருவையுடையவனுமான ஸர்வேச்வரனுடைய மலர்போன்ற திருவடிகளை த்யானிக்கின்ற, மனஸ்ஸையுடைய பாகவதர்கள், புஷ்பம், தீர்த்தம், அம்ருதம் என்னலாம் படி நிவேதனம் செய்யத்தக்க வஸ்து ஆகிய இவற்றுடன் இவற்றின் வகையைச் சேர்ந்த பொருள்கள் முழுதும் மலர்கின்ற தம்முடைய ஜ்ஞாநத்தால் எமக்காக அல்ல, எம்பெருமானுக்கே தகும் என்று அறிபவராவர்.

பாகவதர்கள், புஷ்பம் தீர்த்தம் ப்ரஸாதம் முதலிய உலகிலுள்ள இனிய வஸ்துக்களெல்லாம் பேரருளாளனுக்கு ஸமர்ப்பித்துத் தம்மீது அவன் திருவுள்ளம் குளிர்வதற்காகவே இருப்பனவென்று துணிந்து அவ்வாறு செய்து மகிழ்வரேயன்றித் தமது உபயோகத்திற்காகவெனக் கருதமாட்டார்.

நம்மாழ்வாரும் அனந்தபுரநகர் எந்தைக்கென்று சாந்தொடு விளக்கம் தூபம் தாமரை மலர்கள் நல்ல ஆய்ந்து கொண்டு ஏத்த வல்லார் அந்தமில் புகழினார் என்று இம்மெய்யடியார்களை போற்றிப் புகழ்கிறார்.

மாசி புனர்வஸுவில் அவதரித்த துய்யகுலசேகரனும் நித்யானுஷ்டானம் செய்யும் பஞ்சகால பராயணர்களை இருமுப்பொழுதேத்தி எல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டர் என்று மங்களாசாஸனமிடுகிறார். மேலும் கர்மாநுஷ்டானங்களை ஸாத்விக த்யாகத்துடன் குறைவறச் செய்யும் ஸ்ரீவைஷ்ணவர்களை தீதில் நன்னெறி காட்டி அம்மான் அரங்கனுக்கே காதல் செய் தொண்டர் என்றும் தம்முடைய புருஷார்த்த காஷ்டையைக் காண்பிக்கிறார்.

மாசி ம்ருகசீர்ஷத்தில் அவதரித்த திருகச்சிநம்பிகள் அத்தொண்டரில் மிகவும் முக்கியமானவர். பேரருளாளின் கருணையினால் ஆறு வார்த்தைகளை கேட்டறிந்து நம்மிராமானுசனின் ஸந்தேஹங்களைத் தெளிவுபடுத்தி ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குப் பெருந்தொண்டாற்றிய பெரியோர். தேவப்பெருமாளுக்குத் திருவாலவட்ட கைங்கர்யம் செய்தது மட்டுமின்றி அவன் திருவடிகளில் தேவராஜ அஷ்டகம் எனும் ப்ரபந்தத்தை அனுஸந்தித்தவர்.

இவ்வளவு பெருமை வாய்ந்த மாசி மாதத்தில் ஆழ்வார் ஆசார்யர்களின் திருநக்ஷத்ரம் மட்டுமல்லாது மாசி பௌர்ணமி அன்று வங்காள விரிகுடா ஸமுத்ரத்தில் தீர்த்தவாரி உத்ஸவமும் மேலும் தவனோத்ஸவம் போன்ற விசேஷ உத்ஸவங்களும் நடைபெறவிருக்கின்றன.

அத்புத கட்டுரைகளுடன் அபயப்ரதான ஸாரம் என்ற புதிய தொடரும், தை மாதத்தில் நடைபெற்ற உத்ஸவங்கள், ஆழ்வார், ஆசார்ய திருநக்ஷத்ரம் இவற்றின் படத்தொகுப்புக்களுடன் மாசி மாத தேசிக சந்தேசம் உங்கள் கரங்களில்.

ஸ்ரீ:

# Towards More Elevating, Divine Experience

## FROM THE DESK OF TRUSTEES

With the divine grace of Sri Alarmelmanganayika Sametha Sri Srinivasa Perumal and Lord Sri Lakshmi Hayagrivar, and the boundless blessings of Sri Vedanta Desikan, we are pleased to share the sacred happenings and forthcoming festivals of our Devasthanam with all devotees.

The Uttarayana Punya Kalam, which commenced on Makara Sankranti, is a divinely blessed season that invites every devotee to rise spiritually, accumulate punya, and progress towards Bhagavath Prapthi. Observances undertaken with faith during this period are said to remove obstacles and illuminate the path to eternal bliss.

In the Sri Vaishnava Sampradayam, Uttarayanam is especially significant as it represents Bhagawan's Anugraha Kalam — a time when the Lord is easily pleased by sincere devotion.

The month of Thai was joyously celebrated with traditional fervour through Pongal, Kanu Parivettai, and Vanabhojanam Utsavam. Devotees participated in large numbers and experienced profound spiritual bliss. These festivals beautifully reflect our age-old traditions and reinforce the sacred bond between the Lord and His devotees.

A major spiritual highlight was the Annual Sri Lakshmi Hayagrivar Thirumanjanam, accompanied by a Special Homam and Vidya Abhivruddhi Archanai, conducted for the benefit of students appearing for various examinations. It was heartening to witness more than 1,500 students, accompanied by their parents, participating with devotion and faith as they sought the blessings of Lord Sri Lakshmi Hayagrivar, the embodiment of Jnana (knowledge) and Medha (wisdom).

Lord Hayagrivar, revered as the presiding deity of learning, symbolises clarity of thought, mastery over knowledge, and the removal of ignorance. Worship of Sri Hayagrivar is believed to bestow a sharp intellect, deep concentration, and success in education — values that are especially relevant today.

As we enter the auspicious month of Masi, the Devasthanam will celebrate the Padhuka Sahasra Mahotsavam and Dhavana Utsavam with due grandeur. Special music programmes have been arranged during the Dhavanotsavam for the spiritual enrichment of devotees.

The most sacred and eagerly awaited event of the season is the Maha Magham (Maasi-Pournami) Festival. Devotees will be blessed with the rare opportunity to perform Samudra Snanam alongside the Lord — a spiritually elevating experience believed to cleanse sins and grant divine merit.

We are also pleased to report that the temple renovation works are gaining momentum. It is proposed to conduct the Samprokshanam in the auspicious month of Panguni. Detailed information will be shared with devotees in due course.

We humbly seek the continued patronage, support, and cooperation of all donors, devotees, and well-wishers. Your generosity alone enables the Devasthanam to carry forward its spiritual, cultural, and renovation activities smoothly.

May the Anugraham of Lord Sri Alarmelmangayaka Sametha Sri Srinivasa Perumal and Sri Lakshmi Hayagrivar, along with the blessings of Sri Vedanta Desikan, always guide us on the path of knowledge, devotion, and dharma. ❊

ஸ்ரீ:

| விச்வாவஸு வருட மாசி மாத பஞ்சாங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
| பிப்ரவரி / மார்ச் | மாசி | | | | | |
| 13.02.2026 | 1 | ஏகாதசி | வெள்ளி | மூலம் | மாசி மாதப் பிறப்பு. காலை பெருமாள், தாயார் மூலவர், பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு, தாயார் உள்புறப்பாடு | மாதப்பிறப்பு: ஸ்ரீ அத்திகிரி அருளாளன். ஏகாதசி: ஸ்ரீ அழிசூர் T. ஸ்ரீநிவாஸாசார்யார் & ஸ்ரீ R. ராகவன். தாயார் உத்ஸவம்: ஸ்ரீ V. சேஷாத்ரி குடும்பத்தினர் |
| 14.02.2026 | 2 | த்வாதசி | சனி | பூராடம் | ஸேனைநாதன் | |
| 15.02.2026 | 3 | த்ரயோதசி | ஞாயிறு | உத்திராடம் | ஆளவந்தார் | |
| 16.02.2026 | 4 | சதுர்தசி | திங்கள் | ச்ரவணம் | காலை பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ அழிசூர் R. ராகவன் |
| 17.02.2026 | 5 | அமாவாசை | செவ்வாய் | அவிட்டம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ அத்திகிரி அருளாளன் |
| 18.02.2026 | 6 | ப்ரதமை | புதன் | சதயம் | காலை பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்ய அஸோஸியேஷன் |
| 19.02.2026 | 7 | த்விதீயை | வியாழன் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 20.02.2026 | 8 | த்ருதீயை | வெள்ளி | உத்திரட்டாதி | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம் | தாயார் உத்ஸவம்: ஸ்ரீ A. ராஜகோபால் |
| 21.02.2026 | 9 | சதுர்த்தி | சனி | ரேவதி | திருமால்வடை | |
| 22.02.2026 | 10 | பஞ்சமி / ஷஷ்டி | ஞாயிறு | அச்வினி | திருமால்வடை. ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ர உத்ஸவம் | |
| 23.02.2026 | 11 | ஷஷ்டி / ஸப்தமி | திங்கள் | பரணி | திருமால்வடை | |
| 24.02.2026 | 12 | ஸப்தமி / அஷ்டமி | செவ்வாய் | க்ருத்திகை | ஸ்ரீ நாதமுனிகள் | |
| 25.02.2026 | 13 | நவமி | புதன் | ரோஹிணி | ஸ்ரீ கண்ணன், ஸ்ரீ திருப்பாணாழ்வார் ஆஸ்தானம் | |
| 26.02.2026 | 14 | தசமி | வியாழன் | ம்ருகசீர்ஷம் | ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், திருக்கச்சி நம்பிகள் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், திருக்கச்சி நம்பிகள் வீதிபுறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ அழிசூர் T. ஸ்ரீநிவாஸாசார்யார் |
| 27.02.2026 | 15 | ஏகாதசி | வெள்ளி | திருவாதிரை / புனர்வஸு | குலசேகர ஆழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், தாயார், ஆழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | திருமஞ்ஜனம்: ஸ்ரீ T.S. ரங்கராஜன் குடும்பத்தினர். மாலை சாற்றுமுறை: ஸ்ரீநிதி மோஹன். தாயார் உத்ஸவம்: ஸ்ரீமதி S. காயத்ரி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28.02.2026 | 16 | த்வாதசி | சனி | புனர்வஸு / புஷ்யம் | திருமால்வடை | |
| 01.03.2026 | 17 | த்ரயோதசி | ஞாயிறு | புஷ்யம் / ஆயில்யம் | தவன உத்ஸவம் 1ம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம் | ஸ்ரீ P.R. ஸ்ரீநிவாஸன் குடும்பத்தினர் |
| 02.03.2026 | 18 | சதுர்தசி | திங்கள் | ஆயில்யம் / மகம் | தவன உத்ஸவம் 2ம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம் | ஸ்ரீ V. நரசிம்ஹன் & V. உப்பிலியப்பன் |
| 03.03.2026 | 19 | பௌர்ணமி | செவ்வாய் | மகம் / பூரம் | மாசி பௌர்ணமி. காலை பெருமாள் தீர்த்தவாரிக்கு ஸமுத்ரம் எழுந்தருளல் | பத்மாவதி கைங்கர்ய ஸபா |
| 04.03.2026 | 20 | ப்ரதமை | புதன் | பூரம் / உத்திரம் | ஆண்டாள் | |
| 05.03.2026 | 21 | த்விதீயை | வியாழன் | உத்திரம் / ஹஸ்தம் | தாயார் திருமஞ்ஜனம். மாலை உள்புறப்பாடு | ஸ்ரீ S.V.S. ராகவன் பண்ட் |
| 06.03.2026 | 22 | த்ருதீயை | வெள்ளி | ஹஸ்தம் / சித்திரை | காலை பெருமாள், தாயார் மூலவர், பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம், மாலை பெருமாள்வீதிப்புறப்பாடு, தாயார் உள்புறப்பாடு | ஹஸ்தம்: S.S.P.V.D.K. Trust. தாயார் உத்ஸவம்: ஸ்ரீ அழிசூர் T. ஸ்ரீநிவாஸாசார்யர் |
| 07.03.2026 | 23 | சதுர்த்தி | சனி | சித்திரை | மதுரகவிகள் | |
| 08.03.2026 | 24 | பஞ்சமி | ஞாயிறு | ஸ்வாதி | அன்னகூட உத்ஸவம் | S.S.P.V.D.K. Trust |
| 09.03.2026 | 25 | ஷஷ்டி | திங்கள் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 10.03.2026 | 26 | ஸப்தமி | செவ்வாய் | அனுஷம் | நாதமுனிகள் | |
| 11.03.2026 | 27 | அஷ்டமி | புதன் | கேட்டை | தொண்டரடிபொடிகள் | |
| 12.03.2026 | 28 | நவமி | வியாழன் | மூலம் | திருமால்வடை | |
| 13.03.2026 | 29 | தசமி | வெள்ளி | பூராடம் | காலை பெருமாள், தாயார் மூலவர், பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். தாயார் உள்புறப்பாடு | தாயார் உத்ஸவம்: T.V.S. மோட்டார் கம்பெனி |
| 14.03.2026 | 30 | தசமி / ஏகாதசி | சனி | உத்திராடம் | ஆளவந்தார் | |

## வைணவ வழக்குச் சொற்கள் ⑱

**பஞ்ச ஸம்ஸ்காரம்:** (1) திரு இலச்சினை (சங்கு, சக்ரம்) தோளில் பொறித்துக்கொள்ளல்; (2) 12 புண்ட்ரம் தரித்தல் (திருமண்); (3) தாஸ்ய நாமம் தரித்தல்; (4) ரஹஸ்ய-த்ரய உபதேசம் பெற்று அனுசந்தித்தல் (5) இல்லத்தில் வழிபட விக்ரஹம் பெற்று, ஆராதித்துவருதல் (எல்லாம் முதலில் ஆசாரியனிடமிருந்து). தாபம், புண்ட்ரம், நாமம், மந்த்ரம், யாகம் ஆகியவை

**படி:** பூமி, திருமேனி, ஸ்வபாவம்

**படிச்சோதி:** திருமேனியழகு

**படிமைக்கலம்:** ஆராதன உபகரணம்

**படுகாடு கிடத்தல்:** புயலில் விழுந்த மரங்கள் போலச் செயலற்றிருத்தல்.

**படை:** ஆயுதம், கலப்பை

**பட்டர்பிரான்:** வித்வான்களுக்குத் தலைவர், பெரியாழ்வார்

**பரிசு:** தன்மை, பெருமை

**பலதேவன்:** பலராமன்

**பலி:** பிச்சை

**பள்ளி:** படுக்கை

**பரமைகாந்தி:** பெருமாளிடம் வீடுபேற்றைத் தவிர வேறு எதையும்வேண்டாதவர்கள்

**பத்தர்:** Bound souls

**பத்தி உலா:** கோவிலுக்குள்ளேயே உத்ஸவமூர்த்தி பவனி வருதல்

**'தென்னிந்திய வைணவம் - ஓர் அறிமுகம்' நூலிலிருந்து**

**(தொடரும்...)**

# வால்மீகி

ஸ்ரீ உ.வே. N.S. தேவநாதாசார்யர் ஸ்வாமி, வைகுண்டவாஸீ

நாரதருடைய சிஷ்யர்களுள் முக்கியமானவர் வால்மீகி. பாரத நாட்டுக்கே தனிப் பெருமை தரும் ராமாயணம் என்னும் உலக ப்ரஸித்தமான உத்தம ஆதி காவியத்தின் ஸ்ருஷ்டி கர்த்தாவாகிய வால்மீகி முனிவரை அறியாதார் அறியாதாரே.

ராமாயணத்தை வாசிக்காதவன், இந்தப் பேரின்ப வெள்ளத்தில் மூழ்காதவன்.

*ஜாதே ஜகதி வால்மீகௌ கவிரித்யபிதாபவத் ।*
*கவீ இதி ததோ வ்யாஸே கவயஸ்த்விதி தண்டிநி ॥*

என்பது பழமொழி. 'கவி' என்னும் சொல் நெடுநாள் வரை வால்மீகி ஒருவரையே உணர்த்தவல்லதாக அவருடன் தோன்றி ஒருமையிலேயே நின்றது. வ்யாஸர் தோன்றியதும் அந்தச் சொல்லில் 'த்வி வசனம்' ஏற்பட்டது. தண்டி என்னும் மஹாகவி தோன்றியதும் அது பன்மையையும் பெற்று விட்டது என்பது இதன் கருத்து.

*வஸூதாச்ரோத்ரஜே தஸ்மிந் வ்யாஸே ச ஹ்ருதயஸ்திதே ।*
*அந்யேபி கவய: காமம் பபூவுரநபத்ரபா: ॥*

என்பது ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுடைய தீர்ப்பு. வால்மீகியையும் வ்யாஸரையும் அறிந்த மற்றவர், தம்மையும் கவிகளாகக் கூறிக்கொள்வது வெட்கக்கேடான செயல் என்பது இதன் கருத்து. இவ்வாறு கூறும் நம் ஆசார்ய ஸார்வபௌமர், கவி என்னும் சொல்லின் பொருளையும் நன்கு விளக்கிக் கூறுகிறார்.

*ஸ கவி: கத்யதே ஸ்ரஷ்டா ரமதே யத்ர பாரதீ ।*
*ரஸபாவ பராக்யாநை: அலங்காரை: குணோதயை: ॥*

படைக்கும் கடவுளாகிய நான்முகன் போன்றவனே கவி. அதனிலும் இவனது படைப்பு குறைந்ததல்ல. ரஸங்கள், பாவங்கள். அலங்காரங்கள், குணங்கள் இவை நிரம்பிய ஸரஸ்வதி எவனிடம் தானாகவே இன்பமுற்று விளங்குகிறாளோ அவனே கவி என்பது கருத்து.

பூமியில் துளைபோல் அமைந்த புற்றைக் கவிகள் 'பூமியின் காது' என்று வர்ணிப்பர். அத்தகைய புற்றிலிருந்து தோன்றியவர் வால்மீகி.

வால்மீகியின் கவிதை தனிச்சிறப்புடன் விளங்கு வதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து தீர்ப்புக் கூறுகிறார் காளிதாஸ மஹாகவி.

*தாமப்யகச்சத் ருதிதாநுஸாரீ கவி குசேத்மாஹரணாய யாத: ।*
*நிஷாதவித் தாண்டஜதர்சநோத்த: ச்லோகத்வமாபத்யத யஸ்ய சோக: ॥*
*[ரகு வம்சம் - 14.70]*

உத்தர ராமாயணக் கதை இது. தனிமையில் நடுக்காட்டில் விடப்பட்ட சீதையின் புலம்பல் வால்மீகி முனிவரின் காதில் விழுந்தது. தர்பமும் ஸமித்தும் கொண்டு வரச்சென்ற கவி அந்தப் புலம்பல் வந்த திசையில் சென்று சீதையைக் கண்டார். இவரைக் கவி என்று ஏன் சொல்லுகிறேன், தெரியுமா? ஒரு வேடன் ஒரு பறவையை அம்பினால் அடித்துக் கொன்றான். அது இவர் கண்ணெதிரில் நிகழ்ந்தது. இவருக்குத் தாங்க முடியாத சோகம் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்தது. வாய் விட்டுப் புலம்பினார். அந்தப் புலம்பல் ஓர் அழகிய ச்லோகமாக வடிவம் கொண்டது. இவரது உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த இந்த சோகத்தைப் பிறர் உணருவது அசாத்யம். அதை அவ்வாறே உள்ளது உள்ள படியே நூற்றுக்கு நூறு பங்கு மற்றவர்களது உள்ளத்தில் தெளிவாகப் பதியும்படி இந்த ச்லோகம் செய்துவிடுகிறது.

இது சாதாரணமான கார்யமல்ல; மிகப் பெரிய அரிய சாதனை. கவிதையின் தத்துவமே இதுதான். நல்ல பண்பாடடைந்த உள்ளம், அதில் தோன்றும் அழகிய உணர்ச்சிகள், அவற்றை அநாயாஸமாக, தெளிவாக விளக்கவல்ல எளிய சொற்கள் – இவைதாம் கவிதைக்கு ஜீவநாடி போன்றவை. இவை அனைத்தும் இவரிடம் இயற்கையிலேயே அமைந்திருந்தன. அதனால் கவி என்னும் சொல்லை முழுக் கருத்தும் சிதையாமல் ப்ரயோகித்தால் அது வால்மீகி முனிவர் ஒருவரையே குறிக்கும் என்று காளிதாஸர் பெருமையுடன் கூறுகிறார்.

கவிதையின் தத்வம் கவிக்குத்தான் தெரிகிறது. ஈடு இணையற்ற காளிதாஸ மஹாகவியே வால்மீகி முனிவரை இவ்வாறு புகழ்வதனால் ஓர் உண்மை புலனாகிறது. கவிதையில் வால்மீகி முனிவருக்குக் கிடைத்த முழு வெற்றி, காளிதாஸர் உட்பட மற்றவர் எவருக்கும் கிடைக்கவில்லை என்பதுதான் அது. மிகவும் கம்பீரமாகத் தமது அழகிய கவிதையில் காளிதாஸ மகாகவி இதை வெளியிடும் முறை ரஸிக்கத்தக்கது.

இவ்வாறாகக் கவிதையின் அடிப்படையான தத்வத்தையே எடுத்துக் காட்டவல்ல முறையில் அதியத்புதமாக வால்மீகி முனிவரின் ராமாயணம் அமைந்துவிட்டதனால், இதை 'ஆதி காவ்யம்' என்றும், வால்மீகி முனிவரை 'ஆதி கவி' என்றும் அனைவரும் ஒருங்கே புகழ்வது பொருத்தமே. இப்போது உலகில் நிலவி வரும் பல வகையான ஸம்ஸ்க்ருத காவ்ய நாடகங்கள் முதலிய இலக்கிய நூல்கள் அனைத்துக்கும் முதலில் தோன்றியதனாலும், ஏனைய

நூல்கள் யாவற்றிலும் இதன் நிழல் படிந்திருப்பது மறுக்க முடியாத உண்மையானதனாலும் இதை ஆதி காவ்யம் என்பர்.

**சரித்திரம்**

இப்படி உலகப் புகழ் பெற்ற ஆதி கவி வால்மீகியின் பிற்காலத்தையே நாம் அறிவோம். ராமபக்தர்களுள் சிறந்தவரும் முதன்மையானவருமாகிய இவருடைய பூர்வ சரிதம் விசித்ரமாகவே அமைந்துள்ளது.

அயோத்தி மாநகரை அடுத்த அடர்ந்த காட்டில் மிக்க வறுமை சூழ்ந்த ஓர் அந்தணக் குடும்பம் வஸித்து வந்தது. அதன் தலைவனாகிய அந்தணன் நாள்தோறும் தன் குடும்பத்தினருக்கு உணவு தேடும் பொறுப்பை மிகவும் கஷ்டப்பட்டு நடத்தி வந்தான். நியாயமான வழிகளில் இது நடவாமற் போனதனால் தீய வழிகளிலும் அவன் இழிந்தான். வழிப்போக்கர்களை மடக்கிப் பயமுறுத்தி அவர்களிடமுள்ள பொருள்களைப் பறித்துத் தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தான். இதுவும் பயனளிக்காமற் போயிற்று. தினந்தோறும் பெரும் பொருளுடன் அவன் இருக்கும் ஒற்றை வழியில் யாராவது வந்துகொண்டே இருக்க வேண்டுமே? ஏற்கெனவே பொருளைப் பறிகொடுத்தவர் கூறிய அநுபவ வார்த்தைகளைக் கேட்டு அஞ்சி, அவ்வழியில் யாரும் அரிய பொருள்களை எடுத்துச் செல்வதில்லை. அந்தணனுக்குப் பிழைக்கும் வழி தெரியவில்லை. குடும்பமோ பெரிது. என்ன செய்வான், பாவம்! வழிப்போக்கர்களை அவன் குண்டாந்தடியால் அடித்துக் கொன்று அவர்களிடம் இருந்த பொருளை எடுத்துச் செல்வான். அதைக் கொண்டு குடும்பம் நடந்து வந்தது. எவ்வளவு கால தாமதமானாலும் குடும்பத்தினர்கவலை யாதுமின்றி அவனது வரவையே எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு இருப்பரேயன்றி ஒரு சிறு முயற்சியும் செய்யார். குடும்பத் தலைவனுக்கும் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும் இந்த முறை மிக மிகப் பழக்கமாகிவிட்டது.

**ஸப்தரிஷிகள் வருகை**

ஒரு நாள் அதிகாலையில் வழக்கம் போல் கையில் குண்டாந்தடியுடன் ஒற்றையடிப் பாதையில் அவன் பதுங்கி யிருந்தான். ஒருவர் பின் ஒருவராக ஏழு பேர் அந்த வழியே நடந்து வரலாயினர். விலக்ஷணமான தோற்றம். முகத்தில் ஜ்வலிக்கும் ப்ரஹ்ம வர்ச்சஸம். கண் கூசுகிறது; பார்க்கவே முடியவில்லை. கையில் கமண்டலத்துடன் வேதங்களை கோஷித்துக் கொண்டு வருகின்றனர். அவன் பார்த்தான்; ப்ரமித்துப் போய்விட்டான்.

அந்த ஏழு பேரில் யாராவது ஒருவரைத் தாக்கினால் போதும் அவனுக்கு. எழுவருள் எவரைத் தாக்குவது? என்று யோசித்தான். இது அர்த்தமற்ற கேள்வி. யாராக இருந்தால் என்ன? ஒருவாறாக முடிவு செய்துகொண்டு மறைவாக அவர்களைத் தொடர்ந்தான் அவன். அவர்கள் இதை அறியாதவர்கள்போல் நிம்மதியாகக் கவலையற்று நடந்து ஒரு கிணற்றின் கரையைச் சேர்ந்தனர். தம்முடைய பொருள்களைத் தரையில் வைத்துவிட்டு, கோஷ்டியாக அமர்ந்தனர்.

அந்தணனுக்குத் தன்னையும் அறியாதவாறு மனத்தில் என்னவோ குழப்பம். அவன் திடீரென்று அவர்கள்முன் தோன்றினான். ஸாஷ்டாங்கமாக வணங்கினான். அருளே வடிவெடுத்தாற் போல் தோன்றிய அவர்கள் அவனைப் பரிவுடன் ஆசீர்வதித்து க்ஷேமம் விசாரித்தனர். தங்களை அவன் நாடுவதற்குக் காரணத்தையும் கேட்டனர். அவன் தயங்காமல் உண்மையை வெளியிட்டான். அவன் குடும்பத்துக்கு அன்றைய தினத்துக்கான உணவு அவ்வெழுவருள் ஒருவரை அடித்து வீழ்த்தி அவருடைய பொருளை எடுத்துச் சென்றால்தான் கிடைக்கும். அதற்கான நடவடிக்கையை அவசரமாக எடுத்தாக வேண்டும் என்று ஒளிவுமறைவில்லாமல் கூறிவிட்டான். அதைக் கேட்ட அவர்கள் சிறிதும் கலக்க முறவில்லை. அவனுக்கும் அது புதுமையாக இருந்தது.

முனிவர்களுள் ஒருவர், ‘‘உன் விருப்பப்படியே செய். எங்களுக்கு ஏதும் தடை இல்லை பாவம்! உன் க்ஷேமத்துக்காக ஒரு கேள்வி கேட்கிறோம். முந்துற முன்னம் அதைத் தெளிந்து கொள்வாயாக’’ என்றார்.

‘‘அதென்ன அவ்வளவு முக்கியமான விஷயம்?’’ என்று கேட்டான் அந்தணன்.

‘‘நல்ல நிலைமையில் உயிர் வாழும் ஒருவரை அடிப்பது கொடிய பாவமல்லவா?’’

‘‘ஆமாம். இது எனக்குத் தெரியும். வேறு வழியில்லாமல் தெரிந்தே தினமும் இதைச் செய்கிறேன்.’’

‘‘ஒரு மனிதனை அடித்து எடுத்துச் சென்ற பொருளை நீ ஒருவனே அநுபவிப்பாயா?’’

‘‘இல்லை. என் குடும்பத்திலுள்ள அனைவரும் சேர்ந்து அநுபவிப்போம்.’’

‘‘நீ கொண்டு போகும் பொருளை விரும்பி ஏற்றுக்கொள்ளும் உன் குடும்பத்தினர், இந்தக் கொடிய பாவத்திலும் தக்கவாறு பங்கு கொள்கின்றனரா?’’

‘‘இது எனக்குத் தெரியாது. என் கடமையை நான் செய்து வருகிறேன். குடும்பத் தலைவன் வீட்டிலுள்ளோர் அனைவருக்கும் உணவு கொடுக்க வேண்டாமா?’’

‘‘நல்லது. அவ்வாறே உணவுக்காக அவன் செய்யும் பாவங்களிலும் குடும்பத்திலுள்ளவர்கள் அவரவருக்கு ஏற்ற விகிதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.’’

‘‘இதைப்பற்றி இப்பொழுது என்ன விசாரம்?’’

‘‘இதுதான் இப்போது மிக மிக முக்கியமான விஷயம். மகாபாதகமான செயலைச் செய்து மலைபோல்

பாவங்களை வளர்த்து வரும் நீ. உன் குடும்பத்தினரால் வஞ்சிக்கப் படுகிறாய். நாங்கள் இங்கேயே ஓர் அடிகூடி நகராமல் உட்கார்ந்திருக்கிறோம். நீ திரும்பி வருகிற வரையில். நீ இப்பொழுதே அவரசமாக உன் வீட்டுக்குப் போக வேண்டும். அங்குள்ள உன் குடும்பத்தினரைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்டு, அவர்கள் கூறும் பதிலைத் தெரிந்து கொண்டு வர வேண்டும். பிறகு உன் விருப்பப்படி எங்களுக்குள் யாரை வேண்டுமானாலும் தாக்கலாம்.''

''ஒ! இது நல்ல யோசனை! என்னை வீட்டுக்கு அனுப்பி விட்டு நீங்கள் தப்பியோடப் பார்க்கிறீர்கள். இந்தக் கபட நாடகம் என்னிடம் பலிக்காது'' என்றான் கொள்ளைக்காரன்.

முனிவர், ''நீ திரும்பி வருகிறவரையில் நாங்கள் இங்கிருந்து அகல மாட்டோம். இது சத்யம். நிச்சயமாக நம்பு. உன் க்ஷேமத்துக்காகவே சொல்லுகிறோம். சீக்கிரம் போய்க் கேட்டு வா'' என்றார்.

முனிவர்களிடம் அவனுக்குத் தன்னையும் அறியாமல் கவர்ச்சி ஏற்பட்டது. தன் இயல்புக்கு மாறாக, அவர்கள் சொன்னபடியே வேகமாக வீட்டுக்குச் சென்றான். உணவுக்காக் காத்திருந்த குடும்பத்தினர் வெறுங்கையோடு வந்த அவனைக் கடிந்து கொண்டனர்.

அவன், ''கோபிக்காதீர்கள். இன்றைக்கு வேண்டிய பொருளை ஸித்தப்படுத்திவிட்டுத்தான் இங்கு வந்தேன். ஒருவருக்குப் பதில் ஏழு மனிதர்களைக் கிணற்றங்கரையில் பத்திரமாகக் கட்டிப் போட்டிருக்கிறேன்'' என்றான்.

குடும்பத்தினர், ''பின்பு எதற்காக வெறுங்கையுடன் வந்தாய்? சீக்கிரம் போய் அவர்களிடமுள்ள பொருளைக் கொண்டு வா'' என்றனர்.

''ஒரு ஸந்தேஹத்தைக் தெளிந்துகொள்ளவே வந்தேன்.''

''அதென்ன இன்றைக்குப் புது ஸந்தேஹம்?''

''இந்த உணவுக்காக நான் செய்யும் பாவத்தில் நீங்கள் பங்கு கொள்கிறீர்களா?''

''முடியாது. அந்தப் பாவம் முழுவதும் உன்னுடையது.''

''இதென்ன அதிசயம்? நான் கொண்டு வரும் உணவு உங்களுக்கு வேண்டும். ஆனால் பாவத்தில் உங்களுக்குச் சம்பந்தம் இல்லையா?''

குடும்பத்தினர், ''ஆமாம், அப்படித்தான். எங்களுக்கு உணவு தர வேண்டியது உன் கடமை. நீ புண்யமான முறையிலேயே உணவைத் தேடி வந்தால் நாங்கள் உண்ண மாட்டோம் என்று மறுக்கிறோமா? பாவம் செய்தே உணவைக் கொண்டு வரவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்கிறோமா? இரண்டும் இல்லை. ஆதலின் நீ செய்யும் பாவங்களுக்கும் எங்களுக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. பசிக்கிறது; சீக்கிரம் போய் இன்றைய உணவுக்கு ஏற்பாடு செய்'' என்றனர்.

அந்தணனுக்கு அந்தப் பதில் பேரதிர்ச்சியாக இருந்தது. ஸப்த ரிஷிகள் இருந்த இடத்துக்கு ஓடோடி வந்தான்.

முனி ச்ரேஷ்டர்கள் எதிர்பார்த்தபடியே நடந்தது. அவன் அவர்களை ஸாஷ்டாங்கமாகப் பல தரம் வணங்கினான். ''முனிவர்களே, நீங்கள் மெய்ஞ்ஞானிகள், கருணைக் கடல். பரம நீசனாகிய என் கண்ணைத் திறந்துவிட்டீர்கள். இப்போதுதான் எனக்கு உண்மை விளங்கியது. இந்தக் கணமே இந்தக் கொள்ளைத் தொழிலையும் குடும்பத்தினரையும் துறந்தேன். இனி என் குடும்பத்தினரின் உணவுக்காக நான் எங்கும் தேடி அலையமாட்டேன். எனக்கும் உணவு வேண்டாம். கொடிய பாவங்களின் பிரத்.யக்ஷ சின்னமாகிய இந்த உடலை, மேலும் உணவிட்டுக் காப்பாற்றாமல், வாட்டி உயிர் விடுவேன்'' என்று மனம் கலங்கிக் கதறினான்.

நல்ல காலம் பிறந்துவிட்டது அவனுக்கு. மஹான்களின் தரிசனம் வீண்போகுமா? ''மேருமலைகள் பலவற்றுக் குச் சமமான பாவங்களைச் சேர்த்துவிட்டேனே! இதற்கு ஏதாவது ப்ராயச்சித்தம் சொல்லுங்கள்'' என்று உள்ளங் குமுறி, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகக் கதறினான். அருளே வடிவெடுத்தாற் போன்ற முனிவர்களுக்கு இரக்கம் கரைபுரண்டோடியது. ஆனால் இவன் செய்த பாவங்களுக்கு ஏற்ற ப்ராயச்சித்தம் தான் அவர்களுக்கு விளங்கவில்லை.

அதற்காகப் பல நூல்களைப் புரட்டிப் பார்க்க வேண்டுமா அவர்கள்? அவர்கள் வாயால் சொல்வதெல்லாம் சாஸ்த்ரம்தானே? இவன் மனத்தில் இடம் பெறக்கூடிய மிகச் சிறிய மந்த்ரமொன்றைத் தேர்ந்தெடுத்தனர். அதை இவனுக்கு உபதேசம் செய்தனர். இடையறாது அதையே வாயால் உச்சரித்துக்கொண்டிருக்குமாறு பணித்தனர். ராம நாமமே அந்த மந்த்ரம். வடிவத்தில் மிக மிகச் சிறியது இது; மஹாமந்த்ரங்கள் அனைத்திலும் உயர்ந்தது; ஜபம் செய்வதற்கு எளிதானது; ஸகல பாவங்களும் இந்த மந்த்ரத்தினால் தொலைந்து போகும். இதை அவனுக்கு விளக்கிக் கூறினர்.

ஆனால் அவன் இதைப்பற்றி இவ்வளவு நாளாகக் கேள்வியுற்றதே இல்லை. முனிவர்கள் அகன்றவுடன் இந்த மந்த்ரம் மறந்துவிடும். பிறகு யாரைத் தேடிச் செல்வது? இவ்வளவு கருணையுடன் வேறு யார் பரிவு மேவிட்டு இவனைக் காப்பாற்ற முன் வருவர்? ''என் மனத்தில் இந்த மந்த்ரம் நிலைத்து நிற்காது. ஸர்வஜ்ஞர்களாகிய நீங்களே இதற்கும் ஒரு வழி செய்துவிடுங்கள். எனக்குப் பழக்கமான பொருள்களைத் தான் மறவாமல் மனத்தில் தேக்கி வைத்துக்கொள்ள என்னால் முடியும்'' என்று இவன் கெஞ்சினான்.

முனிவர்கள் யோசித்துப் பார்த்தனர். ''நெடுநாளாக இந்தக் காட்டி லேயே சுற்றித் திரிகிறாயே. இதோ இந்த மரத்தின் பெயரென்ன?'' என்று கேட்டனர் 'மரா' எனறு இவன் சட்டென மொழிந்தான். ''இந்தப் பெயரே உன் பாவத்தைத் துடைக்கவல்லது இதையே ஓயாமல் ஜபம் செய்துகொண்டிருந்து நற்கதியடைவாய்'' என்று கூறி முனிவாகள் இவனைக் குளிரக் கடாக்ஷித்துவிட்டு அகன்றனர்.

இவன் ஒரே உறுதியுடன் அந்த மரத்தின் பெயரையே அனவரதம் ஜபம் செய்து வந்தான். அந்தப் பெயரின் மத்தியில் புனிதமான ராம நாமம் பதிந்திருந்தது. அது இவனைக் கரை சேர்க்க வல்லதாயிற்று. உணவையும் உறக்கத்தையும் இவன் அறவே மறந்தான் பசியும் தாகமும் இவனை விட்டு நீங்கின. அன்றைய தினம் மரா மரத்தின் கீழ் அமர்ந்தவன் பிறகு எழுந்திருக்கவே இல்லை. உள்ளத்தில் ஒளிவீசும் ராம நாமத்தின் மஹிமையினால் கொடிய வன வன விலங்குகளும் இவனைத் துன்புறுத்தவில்லை. இவன் ராமனை நினைந்து ஸமாதி நிலையில ஊன்றி விட்டான் நாள்கள், மாதங்கள், ஆண்டுகள் பல்லாயிரக் கணக்கில் ஓடின. காலசக்ரம் சுழன்று கொண்டே இருந்தது. நாளடைவில் இவன் வால்மீகி முனிவராகி விட்டான்.

நீண்ட காலம் அசையாமல் ஒரே இடத்தில் அமர்ந்திருந்த இவன் மீது இலைகளும் சருகுகளும் உதிர்ந்து மூடிக்கொண்டன. இயற்கையின் போக்குக்கேற்ப, மிகப்பெரிய கறையான் புற்று இவனை மறைத்துக்கொள்ளுமளவில் தோன்றியது. உலகத்தின் பார்வைக்கு அகப்படாமலே புற்றுக்குள்ளேயே நெடுநாள் இவன் மறைந்து கிடந்தான். ஆனால் ராம நாமத்தின் மஹிமையினாலும் மகர்ஷிகளின் அருள்நோக்கின் வலிமையினாலும் இவன் சாகவில்லை. இவனது உறுதி குலையவுமில்லை தொடா்ந்து த்யானம் செய்துகொணடே இருந்தான்.

திடீரென்று ஒரு நாள் பெருமழை பெய்ய ஆரம்பித்தது. இடையறாது பல நாள் பெய்துகொண்டே இருந்தது. இவன் மேல் முடிக்கொண்டிருந்த புற்று முழுவதும் கரைந்தது. சூரிய ஒளியும் காற்றும் இவனது உடலில் பரவின, இவனது ஸமாதியும் முடிவடைந்தது. உக்ரமான ப்ராயச்சித்தத்தின் மஹிமையினால் இவன் தூய்மையடைந்தான். ஆனால் ராம நாமத்தை இவனால் மறக்க முடியவில்லை.

**மூன்று பெயர்கள்**

வால்மீகி, ப்ராசேதஸா், பார்கவா் என்ற மூன்று பெயர்கள் பிற்காலத்தில் இவருக்கு ஏற்பட்டன. முதல் இரண்டு பெயர்கள் இவருடைய பிற்காலச் சரிதத்தை நினைவூட்டுபவை. மூன்றாவது பெயர் இவரது பிறப்பை உணர்த்துகிறது.

**பெயர்க் காரணம்**

வல்மீகம் என்றால் புற்று. 'வல ஸம்வரணே' என்னும் தாதுவிலிருந்து இந்தச் சொல் உருவாகிறது. 'அலீகாதயச்ச (உணாதி, 4.25) 'வலதேர் முமாகமச்ச' என்னும் வ்யாகரண முறைப்படி இந்த தாதுவிலிருந்து இந்தப் பதம் தோன்றுகிறது. 'நன்றாக மூடி மறைத்துக் கொள்ளும் இயல்புள்ளது' என்பது 'வல்மீகம்' என்னும் சொல்லுக்குப் பொருளாகி, அவ்வாறு இருப்பதனால் கறையான் புற்றையும் உணர்த்துவதாகிறது. அதனுள் நெடுநாள் மறைந்திருந்து வெளிவந்ததனால் இவருக்கு வால்மீகி என்னும் பெயர் ஏற்பட்டது. இவரது சரிதத்தை உணர்த்தவல்ல பெயர் இது.

'ப்ரசேதா:' என்று வருணனுக்குப் பெயர். வருணன் ஜலக்கடவுள். அவன் ஸம்பந்தப்பட்ட ஜலம் புற்றைக் கரைத்தது. அதனால்தான் இவர் வெளியுலகத்துக்கு வர முடிந்தது. அவனால் உலகுக்கு அளிக்கப்பட்டமையின் 'வருணனுடைய மகன்' என்னும் பொருளைத் தரும் 'ப்ராசேதஸர்' என்னும் பெயர் இவருக்கு உண்டாயிற்று.

பார்கவர் - ப்ருகு முனிவருடைய வம்சத்தில் பிறந்தவர் வால்மீகி. ப்ருகு வருணனுடைய புத்ரர். ப்ருகுவின் வம்சத்தில் பிறந்ததனால் வால்மீகிக்குப் 'பார்கவர்' என்ற பெயர் வழங்குகிறது. இவர் ப்ருகுவின் மைந்தர் என்றும் கூறுவர்.


*ராவணாந்தகரோ ராஜா ரக்ஷாணாம் வம்ச வர்தந: ।*
*வால்மீகிர் யஸ்ய சரிதம் சக்ரே பார்கவ நந்தந: ॥*
*[மத்ஸ்ய புராணம், 12.50, 51]*

இப்படிப் பிறா் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய இவரது வரலாற்றை உணர்த்தவல்ல காரணப் பெயர்களே இவருக்கு நிலைத்து விட்டன.

**வால்மீகியின் பெருமை**

நாரதரிடமும் நான்முகனிடமும் ஆசி பெற்ற இவர் ஆதி காவ்யமாகிய ராமாயணத்தை இயற்றிய பின், தம் அந்தரங்க சிஷ்யர்களான குச, லவர்கள் மூலம் அதைக் கதாநாயகனாகிய ராமபிரான் திருமுன்பே பாடச்செய்து அரங்கேற்றிய வரலாறு நாடும் நகரமும் நன்கறிந்ததேயாம். இவர் ஸங்கீதம், நாட்யம். வேதாந்தம். வேத, வேதாங்கங்கள், ராஜ நீதி, தர்ம சாஸ்த்ரங்கள், யாக ப்ரயோகங்கள், உலக நீதிகள், யுத்தத் தின் நுட்பமான அம்சங்கள், பல வேறு ஆயுதங்களின் தன்மை, யோகம், தவம் செய்யும் முறைகள் இவை போன்ற அனைத்தையும் நன்கறிந்தவர் என்பதும், தம் மனத்திலுள்ளதை அப்படியே சிறிதும் ஏற்றத் தாழ்வில்லாமல் தெளிவாகப் படிப்பவர் மனத்தில் பதியவைக்க வல்ல சொற்செல்வம் படைத்தவர் என்பதும், அபாரமான கற்பனைகளும் கவிதையும் இவருக்கு வர ப்ரஸாதமாகக் கிடைத்தவை என்பதும் ராமாயணத்திலிருந்தே தெரிகின்றன.

ஸ்ரீ:



# With Pranams:

**Carnatica Archival Centre for Music and Dance**
**Live Long Care Welfare & Welfare Foundation**
**carnaticworld.com**

New No. 12, Dwaraka Colony,
Mylapore, Chennai 600 004.
98400 15013 / 94440 18269.

**SVDD thanks Carnatica Archival Centre for Music and Dance,**
**Live Long Care Welfare & Welfare Foundation & carnaticworld.com**
for sponsoring this month's issue of Desika Sandesam





## போகி உத்ஸவம்







போகி உத்ஸவம்









போகி திருக்கல்யாண உத்ஸவம்





ஸங்க்ராந்தி உத்ஸவம்





ஸங்க்ராந்தி உத்ஸவம்





ஸ்ரீ:

## கண்ணுக்கினியன





பரிவேட்டை உத்ஸவம்







தை வெள்ளிக்கிழமை உத்ஸவம்





ஸ்ரீ:





## வனபோஜன உத்ஸவம்











வனபோஜன உத்ஸவம்











## ரதஸப்தமி
















## தை புஷ்யம் உத்ஸவம்








ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் ஹோமம் - வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை










ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் ஹோமம் - வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை







ஆண்டாள் திருக்கல்யாணம் நாட்டிய நிகழ்ச்சி





ஸ்ரீ:

# ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம் (1)

## ப்ரபந்தாவதாரம் - மங்கள ச்லோகங்கள்

**ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்**

ச்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணனை முதல்வனாகக் கொண்ட நம் ஸத்ஸம்ப்ரதாயத்தின் ஆசார்ய பரம்பரையில் நடுநாயகமாய் எழுந்தருளி, அப்பரம்பரை என்னும் ஹாரத்தின் ஓர் நாயகமணியாய் விளங்கி, அதற்கு மேன்மேலும் அழகு சேர்ப்பவர் ஸ்வாமி தேசிகன். இப்பூவுலகில் ஸ்வாமியின் அவதாரம் ஏற்படப் ப்ரதான காரணங்கள் நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்ரீபாஷ்யகாரர் அடியொற்றி ஸ்தாபிக்கவும், குறிப்பாக நம்மைப்போன்ற சேதனர்களுக்கு ப்ரபத்தி மார்க்கத்தை உபதேசித்து அவர்கள் எல்லோரையும் உஜ்ஜீவிக்கச் செய்வதற்காகவே!

ஆழ்வார்-பூர்வாசார்யர்கள் ஸ்பஷ்டமாக சரணாகதியை அநுஷ்டித்துக் காட்டியபோதிலும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் மந்தர்களான நமக்கு இந்த ப்ரபத்தி விஷயமாக பல கலக்கங்கள் ஏற்படுகின்றன. இவற்றையெல்லாம் தெளிவித்து, நம்மீதுள்ள நிர்ஹேதுக க்ருபையாயாலே நம்மை வழிப்படுத்தி வானேற்ற இச்சரணாகதி விஷயமாக நம் தூப்புல் வள்ளல் பல க்ரந்தங்களை அருளிச்செய்துள்ளார். அவற்றுள் முக்யமானதாகவும் மிகவும் கொண்டாடும் படியாகவும் இருப்பது **ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம்.**

**வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா** - ஸாக்ஷாத் வேதமே மஹர்ஷி வால்மீகியின் திருவாக்கிலிருந்து ராமாயணமாக அவதாரம் செய்தது. ராமாயண காவ்யமே வேதார்த்தத்தை முழுவதுமாக உள்ளடக்கியது. ராமாயணத்தின் முக்கிய நோக்கு சரணாகதி மார்க்கத்தை உபதேசிப்பதும் மற்றும் சரண்யன் சரணடைந்த ஆச்ரிதர்களை ரக்ஷிப்பது பற்றியும் தான் என்ற பல பெருமைகளை உடைய ராமாயண சாஸ்த்ரத்தில் முக்கியமாகக் காட்டப்பட்ட 'அபயப்ரதாநம்' ஒவ்வொரு காண்டத்திலும் எப்படி அமைந்திருக்கிறது என்ற மிக உயர்ந்த அர்த்தங்களை பாமரரும் அறிந்துகொள்ளும்படி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஸ்வாமி தேசிகன் இந்த **ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம்** என்ற க்ரந்தத்தில் நமக்கருளி அநுக்ரஹித்தருள்கிறார். அதனாலேயே இது ஸ்ரீமத் இராமாயணத்தின் ஸாரம் என்னும் ஏற்றத்தைப் பெற்றிருக்கிறது. ஸ்ரீ அபயப்ரதாந ஸாரத்தை பக்தியுடன் எவர் ஒருவர் ஸேவிக்கிறாரோ அவருக்கு ஸ்ரீமத் ராமாயணம் தெரிவிக்கும் முக்கியார்த்ததை அறிந்து கொள்ளும் பாக்யவிசேஷம் ஏற்படும் என்பது திண்ணம்.



**நீசனேன் நிறைவொன்றுமிலேன்** என்ற ஆழ்வாரின் திருவாக்குக்கு எல்லாவிதத்திலும் மிகவும் பொருத்தமான அடியேனையும் திருத்திப்பணிகொள்ள திருவுள்ளம் கொண்ட **திருமலை சதுர்வேத சதக்ரது நாவல்பாக்கம் வலையப்பேட்டை ஸ்ரீ உ.வே. ராமதாதா சார்யர் ஸ்வாமி, ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம்** காலக்ஷேபத்தில் ஸாதித்த அர்த்தங்களை அடியொற்றி அவ்வாசார்யனின் திருவடிகளை வணங்கி, யதாமதி அடியேன் க்ரஹித்த விஷயங்களை ஒரு தொடராகப் பகிர்ந்து கொள்ள முற்படுகின்றேன்.

முதலில் இந்த க்ரந்தத்தை சில மங்கல ச்லோகங்கள் கொண்டு தொடங்குகிறார்:

*ஜயத்யாச்ரித ஸந்த்ராஸ த்வாந்த வித்வம்ஸநோதய: ।*
*ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா பரமவ்யோம பாஸ்கர: ॥*

'ஆச்ரிதர்களுடைய பயமாகிற இருட்டைப் போக்கடிக்கத் தோன்றியவராய், சீதாதேவியால் ஒளிமிகுந்தவராய், ஸ்ரீவைகுண்டத்திற்கு ஸூர்யன் போன்றவருமான ஸ்ரீராமன் ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்குகிறார்,' என்று பெருமாளுக்கு பல்லாண்டு (ஜயதி) பாடி இந்த க்ரந்தத்தை நம் தூப்புல் மால் துவக்குகிறார்.

இங்கே எம்பெருமான் ராமனுக்கும் ஸூர்யனுக்கும் ஒப்புமை காட்டக் காரணம் - உலகில் உள்ள

புறவிருட்டைப் போக்க ஆகாயத்தில் ஸூர்யன் உதிக்கின்றான். ஸூர்ய வம்சத்தில் தோன்றிய சக்ரவர்த்தித் திருமகனான ராமனோவென்னில் தன்னை அண்டிய ஆச்ரிதர்களின் பயம் என்னும் அஜ்ஞானத்தைப் போக்கடிக்க இப்பூவுலகில் அவதரித்தார்.

மஹர்ஷிகள், தேவர்கள், ஸாமாந்யர்கள் என்று ராவணனிடத்தில் பயம் கொள்ளாதவர்களே இல்லை என்ற ஸமயத்தில் இவர்கள் அனைவரின் பயத்தையும் போக்கடித்து, ராவணனை வதம் செய்து தர்மத்தை ஸ்தாபிக்கத் தோன்றிய உதயம் இந்த அவதாரம்.

*சக்யா லோபயிதும் நாஹமைச்வர்யேண தநேந வா ।*
*அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண யதா ப்ரபா ॥*
*[ஸுந்தர காண்டம் - 21.15]*

'ஸூர்யனை எப்பொழுதும் ஒளி பிரியாதிருப்பதுபோல என்னையும் இராமனையும் எப்பொழுதும் பிரிக்கவியலாது' - என்ற பெரிய பிராட்டியாரின் திருவாக்கை அடியொற்றி, ஆசார்யன் **தேவ்யா ஸீதயா ப்ரபாவாந்** - இராமன் என்னும் ஸூர்யனுக்கு ப்ரபையாய் சீதைப்பிராட்டி உள்ளதால் அவரது பெருமை மேன்மேலும் வெள்ளமிடுகின்றது என்று அருளிச்செய்கிறார்.

இப்பூவுலகில் மற்றும் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள ஒளிர்கின்ற வஸ்துக்களுக்கு எல்லாம் ஒளியை அளிப்பவராக, தன்னை அண்டியவர்களின் அக-இருட்டை பிராட்டி விசிஷ்டனாக வீற்றிருந்து ஒழிக்கும் ஸ்ரீ ராமனை முதல் ச்லோகத்தில் மங்களாசாஸனம் பண்ணுகிறார் நம் ஸ்வாமி.

அடுத்து, இந்த ஸ்ரீஸூக்தியில் ப்ரதானமாகக் காட்டப்படும் அயோத்தியர் கோமானின் அபயப்ரதாநத்தை ஒரு ச்லோகம் மூலமாகக் கொண்டாடுகிறார்.

*ப்ராய: ப்ரபதநே பும்ஸாம் பௌந: புந்யம் நிவாரயந் ।*
*ஹஸ்த: ஸ்ரீரங்கபர்துர் மாம் அவ்யாத் அபயமுத்ரித: ॥*

திருவரங்கனது வலது திருக்கையின் திருவிரல்கள் அனைத்தும் மேல்நோக்கியும், உள்ளங்கை ஸேவிப்பவர்களை நோக்கியும் இருக்கிறது. இதற்கு 'அபயஹஸ்தம்' என்று பெயர். தன்னை வழிபடும் சேதனர்களை 'அஞ்சேல்' - பயம் வேண்டாம் என்று பெருமாள் அறிவுறுத்துவது போலுள்ளது இவ்வமைப்பு. அபயம் என்பதற்கு பயம் இல்லாமல் இருப்பது என்பது பொதுவான அர்த்தம். **பும்ஸாம் பௌந: புந்யம் நிவாரயந் ப்ரபதநே** - எம்பெருமானிடத்தில் ஒரு பலனை உத்தேசித்து ஒருமுறை சரணாகதி பண்ணினாலே போதுமானது, அதே பலனைக் குறித்து மீண்டும் மீண்டும் அவனிடத்தில் சரணாகதியை அனுஷ்டித்து அப்பலன் குறித்த நினைவூட்டுதலை தடுப்பது போலுள்ளது அவன் திருக்கை அமைப்பு என்கிறார் ஆசார்யன்.

எந்தவொரு பலனையும் அடைவதற்கு மிக உயர்ந்த உபாயம் என்று சாஸ்த்ரங்களால் கொண்டாடப்பெற்ற ஒரு கார்யத்தை தடுப்பானேன் என்னில் 32 ப்ரஹ்ம வித்யைகளுள் ஒன்றான ந்யாஸ வித்யை என்ற சரணாகதியையும் மற்ற வித்யைகள் போல மீண்டும் மீண்டும் செய்ய வேண்டுமோ என்னில், இல்லை, நம் ப்ரபத்தியை சரண்யனிடத்தில் ஒருமுறை அநுஷ்டித்தாலே போதுமானது, நித்யம் அநுஷ்டிக்க வேண்டியதில்லை என்பதனை உணர்த்த வந்தது அரங்கனின் அபய ஹஸ்தம் என்றும், ப்ரபத்தியை பொறுத்தளவில் மஹாவிச்வாஸம் அவச்யம். ஒரு பலனுக்காக சரணாகதி பண்ணிய பிறகு, பலன் கிடைப்பதில் விச்வாஸம் இல்லாமல் அதே பலனுக்காக இன்னொரு கார்யத்தை செய்வதையும் நம்பெருமாள் அபய ஹஸ்தம் தடுக்கிறது என்று நிர்தாரணம் பண்ணுகிறார் ஆசார்ய ஸார்வபௌமன். இப்படிப் பல பெருமைகளை உடைய அந்த நம்பெருமாளின் அபய ஹஸ்தம் தம்மை ரக்ஷிக்க வேண்டும் என்ற இந்த ச்லோகத்தின் மூலமாக வஸ்து நிர்தேஷத்தைத் (க்ரந்தத்தின் நோக்கு) தலைக்கட்டுகிறார்.

அடுத்து ஒரு ச்லோகம் மூலமாக ஸ்வாமி தேசிகன், ஸ்ரீராமனின் திருவடிகளைப் போற்றி நமஸ்காரம் பண்ணுகிறார். இங்கே அத்திருவடிகளின் மேன்மை அஹல்யை வ்ருத்தாந்தம் மூலமாகக் காட்டப்படுகிறது.

*நமஸ்தஸ்மை கஸ்மைசந பவது நிஷ்கிஞ்சந ஜந*
*ஸ்வயம் ரக்ஷா தீக்ஷா ஸமதிக ஸமிந்தாந யசஸே ।*
*ஸுராதீச ஸ்வைரக்ஷண குபித சாபாயுத வதூ*
*த்ருஷத்தா துர்ஜாத ப்ரசமந பதாம்போஜ ரஜஸே ॥*

**அபாம்ஸுலாநாம் ஸ்வயமக்ரகண்யா** என்று ஆசார்யனே பாதுகா ஸஹஸ்ரத்தில் காட்டியது போல கௌதம மஹர்ஷியின் சாபத்தால் கல்லாயிருக்கையாகிய அஹல்யையின் துர்ஜன்மத்தைத் தன் திருவடி தூள்களின் ஸ்பர்சத்தால் போக்கடித்து, பதிவ்ரதைகளின் கோஷ்டியில் முதன்மையாக இருப்பவள் என்னும் பெரும்பேற்றை அளித்த தாமரை போன்ற அத்திருவடிகள் என்று ஸ்வாமி கொண்டாடுகிறார்.

**பாஷாணநிர்மிததபோதநதர்மதாரம்...** (ஸ்ரீ தேவநாயக பஞ்சாசத்) என்று ஆசார்யவள்ளல் தெய்வநாயகனின் திருவடி வர்ணனத்தை கீழே சொன்ன வ்ருத்தாந்தம் கொண்டு வர்ணிப்பது இங்கு நன்கு ரஸிக்கத்தக்கது.

வேறு கதியில்லாமல் தன்னிடத்தில் சரணடைந்த ஆச்ரிதர்களை ரக்ஷித்தல் என்னும் யாகத்தை பெருமாள் ஒரு தீக்ஷிதர் போன்றும் பிராட்டி அவருக்கு ஸஹதர்ம சாரியாய் இருந்துகொண்டும், ஒத்த கருத்துடன் தீக்ஷித்து (ரக்ஷித்து)க் கொண்டிருக்கிறார்கள். இவ்விருவரின் ரக்ஷணத்தில் யாருடையது சிறந்தது?

*மாதர்மைதிலி ! ராக்ஷஸீஸ்த்வயி ததை -*
*வார்த்ராபராதாஸ்த்வயா*

*ரக்ஷந்த்யா பவநாத்மஜால்லகுதரா*
*ராமஸ்ய கோஷ்டீ க்ருதா ।*
*காகம் தம் ச விபீஷணம் சரணமி -*
*த்யுக்திக்ஷமெள ரக்ஷத:*
*ஸா நஸ்ஸாந்த்ரமஹாகஸஸ்ஸுகயது*
*க்ஷாந்திஸ்தவா'ஸ்மிகீ ।।*
*[ஸ்ரீ குணரத்ன கோசம் - 50]*

மஹர்ஷிகள், காகம், ஸுக்ரீவன், விபீஷணன் போன்றவர்களின் ப்ரார்த்தனைக்குப் பிறகே இராமன் ரக்ஷணம் செய்தார். ஆனால் சீதாதேவியோ தன்னை அக்கணம் வரை ஹிம்ஸித்த ராக்ஷஸிகளை எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி அநுக்ரஹம் பண்ணுவதற்கு ஸித்தமாக இருந்தாள், இப்படி பெரியபிராட்டியின் தயையைக் கொண்டாடி, திவ்ய தம்பதிகள் இருவருமாக அநுஷ்டிக்கும் சரணாகத ரக்ஷண யாகத்தில் அவளது முக்யத்வத்தை அபியுக்தர் அருளிச்செய்கிறார்.

இப்படி மூன்று வடமொழி ச்லோகங்கள் மூலமாக சரணாகதியின் ஏற்றத்தையும், அபய ப்ரதாநத்தின் சிறப்பையும், திவ்யதம்பதிகளின் அநுக்ரஹ விசேஷத்தையும் தலைக்கட்டினார்.

அடுத்து, இரண்டு தமிழ்ப்பாசுரங்கள் மூலமாக இவ்விஷயங்களை மீண்டும் த்ருடீகரணம் பண்ணுகிறார்.

*சாகம் தவிர்க்கும் சுருதிப் பொருள் ஒன்று*
*சொல்லுகின்றோம்*
*நாகம் தனக்கும் இராக்கதர்க்கும் நமக்கும் சரணாம்*
*ஆகண்டலன் மகனாகிய ஆவலிப்பேறிய ஓர்*
*காகம் பிழைத்திடக் கண்ணழிவே செய்த காகுத்தனே.।।*

இந்த்ரனுக்குப் புதல்வனாய், மிக்க அஹங்காரம் கொண்டு, பிராட்டியினிடத்தில் பெரும்பிழை செய்தான் காகாஸுரன். எம்பெருமானின் சீற்றத்துக்கு ஆளாகி, அவர் ப்ரயோகித்த ப்ரஹ்மாஸ்த்ரத்திலிருந்து தன்னை ரக்ஷித்துக்கொள்ள மூவுலகும் சென்றோடி, வேறு ஒருவரும் ரக்ஷிக்க இயலாமையால் இராமனிடத்திலேயே உயிர் வேண்டி சரண் புகுந்தான். ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகம் செய்தால் அதற்கு பலன் இருந்தே தீரவேண்டும். இது சாஸ்த்ரம். கர்மபூமியில் அயோதிக்கரசனாக அபிநயம் செய்வது சர்வேச்வரனேயாகிலும் இந்த நியதிக்கு கட்டுப்பட்டு, காகத்தின் உயிரைப்போக்காது ஒரு கண்ணை மட்டும் அழித்துக் காத்தருளினான். அவனே தேவர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் நம் போன்ற சேதனர்க்கும் உபாயமாவான். இதுவே ஸகல துக்கங்களையும் போக்கவல்ல வேதத்தின் ஸாரார்த்தம் - என்பது பாசுரத்தின் திரண்ட கருத்து.

விபீஷணன் பெருமாளை நோக்கி **ஸர்வலோக சரண்யன்** என்று ப்ரபத்தி பண்ண, சரண்யனின் **அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி** என்ற பதில் திருவாக்கு இப்பாசுரத்துடன் நன்கு அநுஸந்திக்கத்தக்கது.

அடுத்த பாசுரம்:

*ஒருக்காலே சரணாக அடைகின்றார்க்கும்*
*உனக்கு அடிமை ஆகின்றேன் என்கின்றாற்கும்*
*அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும்*
*அஞ்சேல் என்று அருள்கொடுப்பான் இது தான் ஓதும்*
*இருக்காலும் எழில் முனிவர் நினைவினாலும்*
*இவை அறிவார் செயலுடன் என் இசைவினாலும்*
*நெருக்காத நீள் விரதம் எனக்கு ஒன்று என்று*
*நெறி உரைத்தார் நிலை உணர்ந்து நிலை*
*பெற்றோமே.*

விபீஷணசரணாகதி விஷயத்தில் 'ஒருக்கால் என்னைச் சரணமடைந்தவனுக்கும், உனக்குத் தாஸனாக ஆகின்றேன் என்றவனுக்கும் ஒரு ப்ராணியாலும் பயம் உண்டாகாதபடி அபயம் கொடுப்பேன். இதுவே வேதம், ஸ்ம்ருதி, ஸதாசாரம், என் உள்ளக்கருத்து ஆகிய இவ்வனைத்தையும் தழுவிய பெரிய வ்ரதமாகும்' என்று ஸ்ரீ ராமபிரான் வெளியிட்டதை அடியொற்றி, அவனது ஸங்கல்பத்தை உணர்ந்து நாம் த்ருடமாக இருக்கும் சக்தியைப் பெற்றோம் என்கிறார்.

**(தொடரும்...)**

| மாசியில் முக்கிய உத்ஸவங்கள் |
|---|
| **ச்ரவணம்**<br>பிப்ரவரி 16 (திங்கள்) |
| **ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ர உத்ஸவம்**<br>பிப்ரவரி 22 (ஞாயிறு) |
| **திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம்**<br>பிப்ரவரி 26 (வியாழன்) |
| **குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்**<br>பிப்ரவரி 27 (வெள்ளி) |
| **தவனோத்ஸவம் (2 நாட்கள்)**<br>மார்ச் 1 (ஞாயிறு) & 2 (திங்கள்) |
| **மாசி பௌர்ணமி**<br>**பெருமாள் ஸமுத்ர ஸ்நாந புறப்பாடு**<br>மார்ச் 3 (செவ்வாய்) |
| **அன்னகூட உத்ஸவம்**<br>மார்ச் 8 (ஞாயிறு) |

ஸ்ரீ:

# குலசேகர ஆழ்வார்

**ஸ்ரீமதி வஸுமதி S. ராஜன், பெங்களூரு**

*கும்பே புனர்வஸௌ ஜாதம் கேரளே சோள பட்டணே ।*
*கௌஸ்துபாம்சம் தராதீசம் குலசேகரம் ஆச்ரயே ॥*

திருமாலின் கௌஸ்துப மணியின் அம்சமாக, மாசி மாதம் புனர்வஸு நக்ஷத்ரத்தில், கேரள நாட்டின் சோள நகரத்தில் அரசராகப் பிறந்த குலசேகராழ்வாரைச் சரணடைகின்றேன்.

**முன்னுரை**

அரசகுமாரராக அவதரித்தாலும், தக்க வயதில் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்று, நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், மற்றும் ராஜ நீதி நெறிகளையும் குறுகிய காலத்திலேயே கற்று வல்லவராகத் திகழ்ந்தார் குலசேகரர். சோழ, பாண்டிய மன்னர்களை வென்று. மூன்று நாடுகளுக்கும் தலைவராகி, 'கூடல் நாடயகன்', 'கோழிக்கோன்', 'கொல்லி காவலன்' போன்ற விருதுகளைப் பெற்றார்.

எம்பெருமான் இவருக்கு மயர்வற மதிநலம் அருளி, தன் ஸ்வரூப, ரூப, விபூதிகள் , குணங்கள் ஆகியவற்றைக் காட்டிக் கொடுக்க, குலசேகரர் பக்தியுடன் கூடிய ஜ்ஞானம் பெற்று, பெருமானின் கல்யாண குணங்களில் ஈடுபட்டவராய், பாமாலையாகிய **பெருமாள் திருமொழி** என்னும் 105 பாசுரங்கள் கொண்ட ப்ரபந்தத்தை இயற்றினார்.

பெரும்பாலும், ராம, க்ருஷ்ண அவதாரங்களைப் பற்றியே அதிகம் பாடியுள்ளார். கோசலை பாவத்தில் தன்னை நிறுத்தி ராமனுக்குத் தாலாட்டுப் பாடுவது போலவும், தயரதன் பாவத்தில், ராமனைப் புகழ்ந்து பாடுபவது போலவும் 11 பாசுரங்களில் 'குலசேகர ராமாயணம்' என்று கூறும்படி, ராமாயணத்தைச் சுருக்கமாக பெருமாள் திருமொழியில் அருளியுள்ளார்.

**ராமபிரானிடம் ஈடுபாடு**

இவரிடம் மிகுந்து காணப்பட்ட ராமயண ஈடுபாட்டினால் இவரை 'குலசேகரப் பெருமாள்' என்றே அழைக்கலாயினர். **பெருமாளை அறியாதார், பெருமாளை அறியார்** என்ற சொல்லுக்கு ஏற்ப, குசேகரப்பெருமாளை அறியாதவர்கள் ராமபிரானை அறிய மாட்டார்கள் என்ற சொல் வழக்கு உண்டு. ராமனைப் போல, வள நகரத்தைத் துறந்தவர் குலசேகரர்.

**திருவரங்கனிடம் கொண்ட பக்தி**

அடுத்து இவர் மிகவும் பக்தியுடன் ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்நாதனைத் தரிசிக்க ஆவல் கொண்டு தினம் அங்கு செல்ல யத்தனிப்பாராம்.

*குஷ்யதே யஸ்ய நகரே ரங்கயாத்ரா திநேதிநே ।*
*தமஹம் சிரஸா வந்தே ராஜாநாம் குலசேகரம் ॥*

**திருவரங்கத்து அரவணையில் பள்ளிகொள்ளும் கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னைக் கண்ணாரக் கண்டுகக்கும் காதல்** என்று முதல் திருமொழியில் பாடினதற்கு ஏற்ப, பரத்வத்தின் மேன்மைக்கு ஏற்ற ஈரமான குணங்களும், எளிமைக்கு இலக்காண நீர்மை குணங்களும் கொண்ட திருவரங்கனைக் காண தீராத ஆவல் கொண்டார். எம்பெருமானிடம் உண்டான அன்பு, அடியவர்களிடமும் பெருகி வழிந்தது.

**நவவித ஸம்பந்தம்**

பல திவ்ய தேசத்து எம்பெருமான்களை மங்களா சாசனம் செய்து, பாசுரம் இயற்றியவர், திருவித்துவக் கோடு என்னும் திவ்யதேசத்து பெருமானிடம், தனக்கும் இறைவனுக்கும் உள்ள ஒன்பது விதமான ஸம்பந்தத்தை, ஒன்பது உவமைகள் மூலம் விண்ணப்பிக்கிறார்.

ஜீவாத்மாக்களை எல்லா வகையிலும் உஜ்ஜீவனம் அடையச் செய்வதற்குக், கடமைப் பட்டவன் எம்பெருமானே. அவனே சரண்யன் என்பதை அறிந்து, ஒன்பது நிலைகளில் பெருமானுக்கும், ஜீவத்மாக்களுக்கும் உள்ள தொடர்பினை, **தருதுயரம் தடாயேல்** என்ற ஐந்தாம் பதிகத்தின் ஒன்பது பாசுரங்களில் அருளியுள்ளார்.

அவற்றைக் காண்போம்:

1) **பிதா-புத்ரன்: அரிசினத்தால் ஈன்ற தாய்... அதுவே போன்றிருந்தேனே.** எந்தப் பிழை செய்தாலும், அதைப் பொறுத்துக் கொண்டு, திருத்திப் பணி கொள்வது தந்தையின் தன்மையாகும். அடியவர்களுக்கு தந்தை போன்ற எம்பெருமானும் அவர்கள் செய்த பிழைகளைப் பாராட்டாமல், பொறுத்து ,அருள்வான் என்னும் அர்த்தம் கொண்ட பாசுரம் இது.

2) **கணவன்-மனைவி: கண்டாள் இகழ்வனவே... குலமகள் போல்.** குலமகளானவள், கொண்டவனின் சொற்படி கேட்டு நடப்பவள். அவனே கதி என்று இருப்பாள். தன் பர்த்தாவைத் தவிர வேறு எவரையும் கனவிலும் நினைக்க மாட்டாள். ஜீவாத்மாக்களும் அதுபோலவே எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதே தன் ஸ்வரூபத்திற்கு ஏற்றது என்று இருக்கவேண்டும். பகவான் ஒருவனே புருஷன். மற்ற எல்லா ஜீவாத்மாகாளும் அவனுக்கு மனையானவர்ளே. தேவதாந்தர பஜனம் கூடாது என்பதை அழகாக விளக்கியுள்ளார்.

3) **காப்பவன்-காப்பாற்றப் படுபவன்: தான் நோக்காது எத்துயரம்... குடிபோன்றிருந்தேனே.** எம்பெருமானை அரசராகவும் தம்மைக் குடிமகனாகவும் பாவித்துச் சொன்ன பாசுரம். குடிமக்களைக் காப்பது அரசரின் கடைமையாகும். அதுபோல, ஜீவர்களாகிய

நம்மைக் காப்பதும் பெருமானின் கடைமையே. பரமாத்மாவுக்கும், ஜீவாத்மாக்களுக்கும் உள்ள உறவை இப்பாசுரம் காட்டுகிறது.

4) **சேஷன்-சேஷி: வாளால் அறுத்துச் சுடினும்... உனதருளே பார்ப்பன் அடியேனே.** நோயுற்றவனின் நன்மைக்காக, மருத்துவர் கத்தியால் அறுத்து சிகித்சை செய்வது போல, எப்படிப் பட்ட துன்பம் வந்தாலும் அதிலிருந்து நம்மைக் காப்பவன் பெருமான் ஒருவனே. தன் அடியார்களின் நன்மையையே கருதுபவன் அவன். ஜீவர்களும் அவன் அருளையே வேண்டி நிற்பர்.

5) **தாங்குபவன்-தாங்கப் படுபவன்: எங்கும்போய் கரை காணாது... மாப்பறவை போன்றேனே.** கடலில் உள்ள மரக்கலம் பெருமான். அதன் கூம்பில் உள்ள பறவை ஜீவர்கள். இவ்வாறாக உருவகப் படுத்தி, திக்குத் தெரியாத அந்தப் பறவைக்குமரக்கலம் ஆதாரம் போல, ஜீவர்களைத் தாங்கும் ஆதாரமாக பெருமான் விளங்குகிறான்.

6) **அறிபவன்-அறியப் படுபவன்: செந்தழலே வந்து அழலை... அகம் குழைய மாட்டேனே.** குளிர்ந்த தாமரை மலரானது, சூர்யக் கதிர்களின் வெப்பத்தால் மலர்கிறது. வேறு வெப்பத்தைக் கொண்டு அதை மலரச்செய்ய முடியாது. கருகி விடும். அதுபோல் பகவானின் எண்ணிலடங்காக் கல்யாண குணக்கதிர்களினால் அருளுவதால் மட்டுமே ஜீவாத்மாக்கள் காக்கப் படுகிறார்கள் என்று அவனை அறிவதே அறிவுடைமையாகும்.

7) **சரீரம்-சரீரி: எத்தனையும் வான் மறந்த... வைப்பன் அடியனே.** இப்பாசுரத்தில் காள மேகம், பயிர்கள் என்ற உவமையை எடுத்துக் காட்டுகிறார். காளமேகம் - எம்பெருமான், பயிர்கள் - ஜீவர்கள். பயிர்களுக்கு உயிராகத் திகழும் மழையைப் போல, உயிர்கள் தரித்திருப்பது பெருமானின் அருள் மழையால் என்பது இப் பாசுரத்தின் பொருள்.

8) **அனுபவிப்பவன்-அனுபவிக்கப் படுபவன்: தொக்கிலங்கு ஆறெல்லாம்... புக்கிலம் காண் புண்ணியனே.** உண்பவன் (போக்தா) இறைவன். உண்ணப்படுவது (போக்யம்) ஜீவாத்மாக்கள். இறைவன் ஜீவாத்மாக்களின் அன்பை அனுபவிக்கிறான். பெருமானின் மன நிறைவுக்காகவே தங்களைத் தகுதியாக்கிக் கொண்டு, அவன் அனுபவிக்கும் பொருளாகின்றனர் ஜீவர்கள். இந்த உறவு முறையை, ஆறு மற்றும் கடலுக்கு ஒப்பிடுகிறார் ஆழ்வார். ஆறுகள் கடலுடன் கலந்து சேருவது போல, ஜீவாத்மாக்கள் இறைவனை அடைந்து அவனால் அனுபவிக்கப் படுகிறார்கள்.

9) **உரிமையாளன்-உடைமை:** நின்னையே தான் வேண்டி நிற்பன் அடியனே. (நினைவில் கொள்ளவேண்டிய பாசுரம் இது) செல்வத்துக்கு உரியவனாக பெருமானையும், செல்வத்தின் நிலையில் ஜீவர்களையும் உவமையாக்கிப் பாசுரமிடுகிறார். ஜீவாத்மா , பரமாத்மாவின் உடைமை. நாம் அவனின் சொத்து. அதற்கு உரியவன் அவனே. நாம் அவன் இட்ட வழக்காகவே செயல் பட வேண்டும். அவனுக்காகவே இட்டுப் பிறந்தவர்கள் ஜீவர்கள்.

வித்துவக் கோட்டு இறைவனிடம் உரைத்த இந்த உவமைகள் மூலம் நம் விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தில் கூறப்படும், நவ வித ஸம்பந்தங்களை நன்கு விளக்கியுள்ளார் ஆழ்வார்.

**குலசேகரரின் பெருமை**

அடியார்கள் பால் தூய மனம் கொண்ட இவரை **துய்ய குலசேகரன்** என்று போற்றுகிறார் ஸ்ரீ வேதாந்த தேசிகன்.

ஆழ்வார் பிறந்த தினத்தை இவ்வாறாகப் போற்றுகிறார், ஸ்ரீ மணவாள மாமுனிகள்: **கொல்லி நகர்கோன் குலசேகரன் பிறப்பால் நல்லவர்கள் கொண்டாடும் நாள்.**

திருவரங்கத்தமுதனார் தான் அருளிச் செய்த இராமானுச நூறந்தாதியில், **கொல்லிக்காவலன் சொல் பதிக்கும் கலைக்கவி பாடும் பெரியவர் பாதங்களே துதிக்கும் பரமன் இராமானுசன்** என்று கூறுகிறார்.

எம்பெருமானார் அருளிய பெருமாள் திருமொழி தனியனில், **இன்னமுதம் ஊட்டுகேன்... எங்கள் குலசேகரன் என்றே கூறு** என்று உரைக்கிறார்.

திவ்ய தேசங்களில் வாழும் பறவைகள் எம்பெருமானின் திருநாமத்தைச் சொல்வதாக பல இடங்களில் ஆழ்வார்கள் அருளிச் செய்துள்ளனர். அதுபோல தன் ப்ரதான சிஷ்யரான கூரத்தாழ்வானைக் கிளியாகப் பாவித்து, குலசேகரரின் பெருமைகளைப் பாடுமாறு விளிக்கிறார் ராமானுஜர்.

இப்படிப் பட்ட பெருமை வாய்ந்த குலசேகராழ்வார், **படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே** என்று திருவேங்கடமுடையானிடம் வேண்டினார். அதற்கேற்ப எல்லா வைணவத் தலங்களிலும் உள்ள உள் வாசற்படி, **குலசேகரன் படி** என்றே வழங்கப் படுகிறது.

**முடிவுரை**

பல திவ்ய தேசத்து எம்பெருமான்களைத் தரிசித்து விட்டு, திருக்குருகூர் சென்று நம்மாழ்வாரை ஸேவித்து, பின் அருகில் உள்ள ப்ரம்மபுரம் என்ற மன்னார்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ராஜகோபாலனுக்குக் கைங்கர்யம் செய்து அங்கேயே சில காலம் தங்கியிருந்து, தன்னுடைய 67-வது வயதில் பரமபதித்தார் குலசேகராழ்வார்.

எப்பொழுதும் எம்பெருமானின் திருவடித் தாமரைகளில் மாறாத பக்தி உடையவனாக இருக்க வேண்டும் என்று வேண்டிய குலசேகராழ்வார் திருவடிகளைப் போற்றிப் பணிவோமாக!

ஶ்ரீ:

# பக்தியெனும் பரமாநந்தம்

**ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்**

ஸ்ரீமந்நாராயணன் பரமாத்மா. கர்மானுகுணமாக ஜன்மம் கொள்ளும் ஜீவாத்மாக்கள் (ஜீவர்கள்) எம்பெருமானின் ஸங்கல்பத்தினாலும் தத்தம் ஸுக்ருத பலத்தினாலும் அந்தப் பரமாத்மனுடனான தேஹ-ஆத்ம ஸம்பந்தத்தினை உணர்கிறான். அவனுடனான பிரிவினைத் தாங்கவொட்டாமல் ஏக்கம் கொள்கிறான். அந்த ஏக்கத்தினால் எம்பெருமானைப் பற்றின ஸ்மரணம், ச்ரவணம், தர்சனம் என்று அனைத்தும் ஜீவனை உருக்குகின்றன. அகமும் **(ஆடியாடியகம் கரைந்து)** புறமும் **(இசை பாடிப்பாடி கண்ணீர் மல்கி)** ஒருசேர உருகுவது பக்தியாகிறது. இந்த உருக்கத்தினை அநுபவித்த ஆழ்வார்கள், கர்மபத்தர்கள் உய்யவெனத் தங்கள் அநுபவத்தை பற்பல பாசுரங்கள் மூலம் தெளிவுறக் காண்பிக்கின்றனர்.

**ஆழ்வார்கள் அநுபவித்த பக்தி**

*காலுமெழாக் கண்ணநீரும் நில்லா உடல்சோர்ந்து நடுங்கி குரல்*
*மேலுமெழா மயிர்க்கூச்சுமறா என்தோள்களும் வீழ்வொழியா*
*மாலுகளா நிற்கும்மென் மனனே! உன்னைவாழத் தலைப்பெய்திட்டேன்*
*சேலுகளா நிற்கும் நீளசுனைசூழ் திருமாலிருஞ் சோலையெந்தாய்!*
*[பெரியாழ்வார் திருமொழி 5-3-5]*

‘உன்னை ஸேவித்த அந்த க்ஷணம், எனது சரீரமானது பரவசத்தில் தடுமாற, கால்கள் நகர மறுக்க, கண்கள் நீர் சொறிந்தவாறு இருந்தன. குரல் நடுங்கி பேச்சும் வரவில்லை. ரோமங்கள் புளகாங்கிதத்தில் எழ, தோள்கள் தொய்ந்து போய் நின்றேன். உன்பால் பித்துப் பிடித்த என் மனமோ உன்னை அநுபவிக்கத் துடித்தது’ என்கிறார் பெரியாழ்வார்.

*பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும்*
*காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும் - நீலாழிச்*
*சோதியாய் ஆதியாய் தொல்வினை எம்பால்கடியும்*
*நீதியாய் நின்சார்ந்து நின்று.*
*[பெரிய திருவந்தாதி - 34]*

திருப்பாற்கடலில் தனது நாதன் பள்ளிகொண்டிருக்கும் அழகைப் பற்றி செவியுற்ற அந்த க்ஷணத்தில், தனது கால்கள் தடுமாற ஹ்ருதயம் உருக கண்கள் சுழன்றன என்கிறார் நம்மாழ்வார்.

*நிலையாளா! நின்வணங்க வேண்டாயேயாகிலும் என்*
*முலையாள ஒருநாள் உன் அகலத்தால் ஆளாயே?*
*சிலையாளா! மரமெய்த திறலாளா! திருமெய்ய*
*மலையாளா! நீயாள வளையாள மாட்டோமே!*
*[பெரிய திருமொழி 3-6-9]*

‘அடியாளுக்கு நித்ய கைங்கர்யம் அநுக்ரஹிக்க உனக்கு மனமில்லையென்றாலும், உனது திருமேனி ஸம்பந்தத்தினை எனக்கு அருளக் கூடாதா? எனது ஸ்தனங்களை உனது அகன்ற திருமார்புடன் சேர்த்து அணைத்துக் கொண்டாயெனில் அந்த ஸம்ச்லேஷ ஸந்தோஷத்தில் என் கை பருத்து வளையானது வெடித்துச் சிதறி விடும். அப்படி நீ என்னுடன் கூடாத வேளையில் அடியாள் தேகம் மெலிந்து கை வளை கழன்று ஓடி விடும். நீ என்னை உன் ஆளுகைக்கு உட்படுத்தும் நன்னாள் எந்நாளோ!’ என்று ஸம்ச்லேஷத்திற்காக ஏங்கும் ஒரு மங்கையின் பாவத்தில் திருமங்கை மன்னன் பாடுவதாய் அமைந்த பாசுரமிது.

மேற்கண்ட மூன்று பாசுரங்களும் முறையே எம்பெருமானின் ரூப, ஸௌந்தர்யாதிகள், ஸ்மரணம் மற்றும் விரஹம் ஆகிய உணர்ச்சிகளில் ஆழ்வார்கள் சிக்கித் தவித்த நிலையினைக் காண்பிக்கும்.

**பக்தி எம்பெருமானை வசப்படுத்தும் யுக்தி**

சேதனர்கள் புநராவ்ருத்தியற்ற நிலைமையினை அடையத் திருவுள்ளம் பற்றின ஆழ்வார்களும் பாகவதோத்தமர்களும், எம்பெருமானிடத்தே பற்பல பாவங்களில் அந்வயித்து பக்தியென்றால் என்னவென்று ஆச்ரிதர்க்கு உணர்த்தியுள்ளனர். இத்தகைய காருண்யவான்கள் உணர்த்திய பக்தி நிலைகள் சிலவற்றை உதாஹரணங்களுடன் காண்போம்.

- **திருக்கல்யாண குணாநுபவம்** - நாரதமுனி
- **ரூப, ஸௌந்தர்யாதிகளை** அநுபவிப்பது - கோபிகைகள்
- **அர்ச்சனம்** - பூஜை புநஸ்காராதிகளை ச்ரத்தையுடன் செய்வது - அம்பரீசன்
- **கீர்த்தனம்** - எம்பெருமான் பற்றிப் பாடுவது / வ்யாஸங்கள் இயற்றுவது - நாரத முனி / வேத வ்யாஸர்
- **ஸ்மரணம்** - எம்பெருமான் பற்றின விஷயங்களை ஸ்மரிப்பது - சீதா பிராட்டி / ப்ரஹ்லாதன்
- **தாஸ்ய பாவம்** கொண்டு கைங்கர்யங்கள் பண்ணுவது - ஹநுமன் / குஹன்

- **ஸகி / ஸகா பாவம்** கொண்டு எம்பெருமானை அநுபவிப்பது - பார்த்தன் / ஸுக்ரீவன்
- **காந்தா பக்தி** - எம்பெருமானை பதியாக பாவித்து அநுபவிப்பது - நம்மாழ்வார்
- **வாத்ஸல்ய பக்தி** - எம்பெருமானுக்குத் தாயாகி அவனைக் குழந்தையாக அநுபவித்தல் - யசோதை / கௌஸல்யை
- **ஆத்மநிவேதநம்** - தன்னையே எம்பெருமானுக்கு ஸமர்பிப்பது – மஹாபலி சக்ரவர்த்தி
- **ஸம்ச்லேஷ பக்தி** - எம்பெருமானுடன் கூடுவதாக பாவித்து ஸந்தோஷித்திருப்பது - கோதை நாச்சியார்
- **பரம விரஹம்** - எம்பெருமானிடத்தே மோஹம் கொண்டு தவிப்பது - ராதை / நம்மாழ்வார்
- **பாகவத பக்தி** - எம்பெருமானின் பாகவதர் களிடத்தே கொள்ளும் சேஷ பாவம் - குலசேகராழ்வார்

பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒருவரான குலசேகராழ்வார் தனது பாசுரங்களில் பல்வகையான பக்தி நிலைகளைக் காண்பிக்கிறார்.

**குலசேகராழ்வார் கொண்ட பக்தி**

ஸ்ரீரங்கநாதனின் ஸந்நிதிக்குச் சென்று கைங்கர்யங்கள் செய்யும் நாள் எதுவோ என்று ஆழ்வார் ஏங்குவதாய் அமைந்த பெருமாள் திருமொழி பாசுர வரிகள் இவை.

- கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு என் கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே (1.1) **– ரூப, ஸௌந்தர்யாதி அநுபவ பக்தி.**
- மாயோனை மணத்தூணே பற்றி நின்று என் வாயார என்றுகொலோ வாழ்த்தும் நாளே (1.2) **– கீர்த்தனம்.**
- அம்மான்தன் அடியிணைக் கீழ் அலர்கள் இட்டு அங்கு அடியவரோடு என்றுகொலோ அணுகும் நாளே (1.3) **– அர்ச்சனம் / பாகவத பக்தி.**
- கோவினை நா உற அழுத்தி என்தன் கைகள் கொய்ம்மலர் தூய் என்றுகொலோ கூப்பும் நாளே (1.4) **– தாஸ்ய பக்தி.**
- மணிவண்ணன் அம்மானைக் கண்டுகொண்டு என் மலர்ச் சென்னி என்றுகொலோ வணங்கும் நாளே (1.5) **- தாஸ்ய பக்தி.**
- ஒளி மதி சேர் திருமுகமும் கண்டுகொண்டு என் உள்ளம் மிக என்றுகொலோ உருகும் நாளே (1.6) **– ரூப, ஸௌந்தர்யாதி அநுபவ பக்தி.**
- மாயோனை கண்டு என் கண்கள் நீர் மல்க என்றுகொலோ நிற்கும் நாளே (1.7) **- தாஸ்ய பக்தி.**
- மாலோனைக் கண்டு இன்பக் கலவி எய்தி வல்வினையேன் என்றுகொலோ வாழும் நாளே (1.8) **- பரம விரஹ பக்தி.**
- போர் ஆழி அம்மானைக் கண்டு துள்ளிப் பூதலத்தில் என்றுகொலோ புரளும் நாளே! (1.9) **- ஸம்ச்லேஷ பக்தி.**
- இன்ப மிகு பெருங் குழுவு கண்டு யானும் இசைந்து உடனே என்றுகொலோ இருக்கும் நாளே (1.10) **- ஆத்ம நிவேதநம்.**

**பாகவத பக்தி**

*செவ்வரி நற்கருநெடுங்கண் சீதைக்காகிச்*
*சினவிடையோன் சிலையிறுத்து மழுவாளேந்தி*
*வெவ்வரி நற்சிலைவாங்கி வென்றிகொண்டு*
*வேல்வேந்தர் பகைதடிந்த வீரன்தன்னைத்*
*தெவ்வரஞ்சு நெடும்புரிசையுயர்ந்த பாங்கர்த்*
*தில்லைநகர்த் திருச் சித்ரகூடந்தன்னுள்*
*எவ்வரிவெஞ்சிலைத் தடக்கையிராமன் தன்னை*
*இறைஞ்சுவாரிணையடியே இறைஞ்சினேனே*
*[பெருமாள் திருமொழி – 10.3]*

ஸ்ரீராமனின் வீரத்தினைப் புகழ்ந்து, அவனடி பணிந்தோர் திருவடியைத் தான் பணிந்து இறைஞ்சு வதாக ஆழ்வார் ஸேவிக்கும் இந்தப் பாசுரம், எம்பெருமானது அடியார்களிடம் அவர் கொண்டிருந்த பக்தியின் ஆழத்தினைக் காண்பிக்கும்.

தாஸ்ய பக்தி

எம்பெருமானிடத்தே தாஸ்ய பாவம் கொண்டு ஆழ்வார் உருகுவதாய் அமைந்த பெருமாள் திருமொழி பாசுர வரிகள் இவை:

- வேங்கடத்துக் கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே (4.1)
- திருவேங்கடச் சுனையில் மீனாய்ப் பிறக்கும் விதி உடையேன் ஆவேனே (4.2)
- வேங்கடக்கோன் தான் உமிழும் பொன்வட்டில் பிடித்து உடனே புகப் பெறுவன் ஆவேனே (4.3)
- வேங்கடத்துச் செண்பகமாய் நிற்கும் திரு உடையன் ஆவேனே (4.4)
- வேங்கட மலைமேல் தம்பகமாய் நிற்கும் தவம் உடையன் ஆவேனே (4.5)
- வேங்கடத்துள் அன்னனைய பொற்குவடாம் அருந்தவத்தன் ஆவேனே (4.6)
- திருவேங்கட மலைமேல் கானாறாய்ப் பாயும் கருத்து உடையன் ஆவேனே (4.7)
- திருவேங்கட மலைமேல் நெறியாய்க் கிடக்கும் நிலை உடையன் ஆவேனே (4.8)

- படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே (4.9)
- திருவேங்கடம் என்னும் எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே (4.10)

**வாத்ஸல்ய பக்தி**

*ஆலைநீள் கரும்பன்னவன் தாலோ*
*அம்புயத் தடங்கண்ணினன் தாலோ*
*வேலைநீர் நிறத்தன்னவன் தாலோ*
*வேழப்போதகமன்னவன் தாலோ*
*ஏலவார் குழலென்மகன் தாலோ*
*என்றென்றுன்னையென் வாயிடை நிறைய*
*தாலொலித்திடும்திருவினையில்லாத்*
*தாயரிற்கடையாயின தாயே!*
*[பெருமாள் திருமொழி - 7.1]*

முதல் ஐந்து வரிகளில் தனது புத்ரனின் அழகினை வர்ணித்து கடைசி மூன்று வரிகளின் மூலம் இப்படியெல்லாம் பாடி உன்னைத் தாலாட்ட முடியாத நான் அன்னையர்களில் நீசமானவள் என்று மாத்ரு வாத்ஸல்யத்துடன் தேவகி பாவத்தில் குலசேகரப் பெருமான் அங்கலாய்க்கும் பாசுரம் இது.

**காந்தா பக்தி**

*மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு*
*வீங்கிருள்வாயென்தன் வீதியூடே*
*பொன்னொத்த வாடைக் குக்கூடலிட்டுப்*
*போகின்றபோதுநான்கண்டு நின்றேன்*
*கண்ணுற்றவளை நீ கண்ணாவிட்டுக்*
*கைவிளிக்கின்றதும் கண்டே நின்றேன்*
*என்னுக்கவளை விட்டிங்குவந்தாய்?*
*இன்னமங்கே நடநம்பி! நீயே.*
*[பெருமாள் திருமொழி - 6.5]*

'நான் பொறாமைப்பட வேண்டுமென்றே இருளிலும் பளிச்சென்று தெரியும்படியாக பீதாம்பரத்தினை உடுத்திக் கொண்டதோடு, உன்னுடன் சேர்த்து அணைத்தவாறு மெல்லிடையாள் ஒருத்தியையும் நடுச்சாம வேளையில் எனது வீதி வழியாக அழைத்துச் சென்றதை நான் கண்டேன். அவளுடன் நீ உன் கண்களாலேயே பேசிக் கொள்வதையும் கண்டேன். இப்போது எதற்காக இங்கு வந்திருக்கிறாய்? அவளிடமே போ' என்று கோபிகை பாவத்தில் ஆழ்வார் க்ருஷ்ணனிடத்தே ஊடல் கொள்வதாய் அமைந்தது இந்தப் பாசுரம்.

**பரம விரஹ பக்தி**

*கெண்டையொண்கண்மடவாளொருத்தி*
*கீழையகத்துத்தயிர்கடையக்*
*கண்டு ஒல்லைநானும் கடைவனென்று*
*கள்ளவிழியை விழித்துப் புக்கு*
*வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ*
*வாண்முகம் வேர்ப்பச் செவ்வாய் துடிப்ப*
*தண்தயிர் நீ கடைந்திட்ட வண்ணம்*
*தாமோதரா! மெய்யறிவன் நானே.*
*[பெருமாள் திருமொழி - 6.2]*

எனது வீட்டின் கிழக்கே இருக்கும் இடைப்பெண் தயிர் கடைவதைக் கண்ணுற்று, நீ மட்டும் இப்படி கடைந்து கொண்டிருந்தால் நேரமாகும். அதனால் நான் உனக்கு ஸகாயம் புரிகிறேன் பெண்ணே என்று கூறி, அவிழ்ந்து அலையும் முடியுடன் ஒளி பொருந்திய முகத்தில் முத்துக் கோர்த்தது போல வியர்வைத் துளிகள் வழிய, அதரம் துடிக்க, அவளுடன் சேர்ந்து நீயும் தயிர் கடைந்த விஷயமெல்லாம் நான் அறிவேன். இப்போது இங்கே எதற்கு வந்திருக்கிறாய்? அங்கேயே போய் அவளுடன் மேலும் பல பானைகள் நிறையும்படியாகத் தயிர் கடைய வேண்டியது தானே என்கிறார் ஆழ்வார் இடைப்பெண் ஒருத்தியின் பாவத்தில்.

**ஆத்ம நிவேதனம்**

*தருதுயரம் தடாயேல் உன்சரணல்லால் சரணில்லை*
*விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ்*
*விற்றுவக்கோட்டம்மானே!*
*அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் -*
*மற்றவள் தன்*
*அருள்நினைந்தேயழும் குழவியதுவே*
*போன்றிருந்தேனே.*
*[பெருமாள் திருமொழி - 5.1]*

ஏதேனும் ஒரு காரணத்திற்காகத் தாயானவள் தனது சேயிடத்தே கோபித்துக் கொண்டாலும், அந்தச் சேய் ஆறுதலுக்காகத் தனது தாயினையே நாடிச் சென்றடையும். அதே போல எம்பெருமான் தன் மீது சினமுற்றாலும் அவனடியையே தான் தேடிச் செல்வதனால், எம்பெருமானுக்கும் தனக்குமானது தாய்-சேய் ஸம்பந்தம் என்கிறார் ஆழ்வார்.

ராவணாதிகள் போன்று மற்றவரது அழிவை அபேக்ஷிக்காமல் **(தாமஸ பக்தி)**, அநித்யமான காம்யார்த்தங்களை ப்ரார்த்திக்காமல் **(ராஜஸ பக்தி)**, பகவத் ப்ரீதிக்காக **(ஸாத்வீக)** பக்தி செய்வோம். நமக்காகக் காத்திருக்கும் நற்கதியை, நம் பதியை அடைவோம்.

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஶ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (35)

## Kulasekhara Azhwar And Nrusimha — The Intrigue Of The Missing Thread

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

A strange fact would be a startling revelation to many readers.

Which of these Avatharas does not find Mangalaasaasanam in Kulasekhara Azhwar's Perumal Thirumozhi: Varaha, Nrusimha, Vamana, Rama or Krishna? The answer, of course, is Nrusimha.

Sharing a few resultant thoughts on this point even as the Azhwar's Thirunakshatram (Maasi-Punarvasu) falls on Feb. 27 this year.

The Lord is birthless. No one has ever created him either. However, of his own free will he allows Himself to be born on the earth taking various forms from time to time (அஜாயமாந: பஹுதா விஜாயதே). These manifestations are called Avatharas.


The agenda of the Lord's incarnation is mainly three-fold: To protect noble people (devotees), to annihilate the evil forces and to establish righteousness.

பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்!
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே!!

Though there are numerous Avatharas undertaken by the Lord, ten are considered to be the foremost and they are called Dasa Avatharas (Mathsya to Kalki). Of these, Rama and Krishna are the ones with full life-span and hence are called 'Poorna Avatharas'. Varaha, Nrusimha and Vamana constitute the next level. Though these three are momentary in nature, the legends attribute great significance to them as they fulfil all the three purposes of an Avathara. Of the three, Nrusimha Avathara stands out as it happened to prove the words of the devotee right.

Aptly, along with Rama and Krishna, Nrusimha is a favourite of Azhwars and they extol the three incarnations extensively in their great Tamil works collectively known as Divya Prabandham.

There are about 160 references to Nrusimha Avathara in the entire Divya Prabandham, which is quite a substantial representation for a momentary manifestation. Besides Perumal Thirumozhi, both the Prabandhams of Thondar AdipPodi Azhwar (Thirumaalai and ThirupPalli Ezhuchchi) are also devoid of a reference to Nrusimha, while even Amalanaadhi Piraan — a small Prabandham of 10



experience.

Coming back to Kulasekhara Azhwar, let me explain why his missing out on Nrusimha is strange. Perumal Thirumozhi is a reasonably large Prabandham comprising 105 Paasurams.

Kulasekhara Azhwar's devotion to Ranganatha and Rama as also the devotees is legendary. He has dedicated the first three decads to the Lord of Srirangam, with the second one especially glorifying His devotees. The subject matter of the last three decads is Rama. In the fourth decad, he expresses his yearning to be born in Thiruvenkatam in some form or the other. The next one is on the Lord of Thiru ViththuvakKodu, while decads six and seven are exclusively on Krishna Avathara.

Besides, even Avatharas like Koorma (8-8), Varaha and Vamana (both 2-3) find a mention each. Under the circumstances, for the Azhwar not to have a single reference to an important Avathara like Nrusimha through the length of the Prabandham is difficult to comprehend.

Of course, it is arguable (albeit unconvincingly) that the mention "ஆலிநகர்க்கு அதிபதியே' (8-7) refers to Nursimha as the presiding deity of the Divyadesam Thiruvaali is Lakshmi Nrusimha. But the emphasis here is on the Archa (idol) form rather than Vibhava (Avathara).

Also, Kulasekhara Azhwar is credited with the authorship of Mukunda Mala, a lovely hymn of 40 verses steeped in devotion. The Naama 'Hari' occurs in a few Slokas (Nos. 8, 9, 10, 34 & 36) but they all connote 'Narayana' or 'Vishnu' and not 'Nrusimha'.

Considering this, the case of the missing thread between Nrusimha and the Azhwar is even more perplexing!

*(to be continued…)*



Paasurams by ThirupPaan Azhwar — extols this Avathara (Paasuram No. 8).

Thondar AdipPodigal's silence on Nrusimha is hardly surprising as his fondness for Archa form of Lord, that too Lord Ranganatha, to the exclusion of the Lords of a whopping majority of other Divyadesams, has been well documented and is widely known. Only Ayodhya, Mathura and ThirupPaarkadal are exceptions.

Madhurakavi Azhwar may well be excluded from this study as he has sung solely on his Acharya Nammazhwar.

The Azhwars who have experienced the glory of Nrusimha in surfeit (as a proportion to the number of Paasurams composed) are the Mudhal Azhwars, Thirumazhisai Azhwar, Nammazhwar, Periyazhwar and Thirumangai Azhwar. Andal too has her own little share of Nrusimha adulation sprinkled through her Naachchiyaar Thirumozhi. This completes a broad overview of Azhwars and their Nrusimha


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**

9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,

மயிலாப்பூர், சென்னை – 600004. போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.**



திருமழிசையாழ்வார் திருநக்ஷத்ரம்











கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்





